தென்மொழி

வந்து கூடுவீர் தமிழ் மக்காள்!

சாதிநிலை வேரறுத்துச் சமயநிலை சீர்திருத்திச்
சமவுடைமைப் பொதுவுணர்வுக் கொள்கை செய்து,
பாதியிலே மொழியிழந்து, படிப்படியாய்த் தாழ்வுற்றுப்
பார்ப்பனியக் கோட்பாட்டுக் கடிமை யுற்றுப்
பூழ்தியிலே நெளிபுழுவாய்ப் புன்மைநிலைத் தேரையதாய்ப்
புலங்கிடக்கும் தமிழனிடைப் புழங்கக் கூறி,
'வாழ்தியடா தமிழா, நீ' எனவாழ்த்துப் பாடுகின்ற
நாளொன்றை வரவழைப்போம்; வருவீர் மக்காள்!

விழிப்பற்ற தூக்கத்தில் விலகலிலா மயக்கத்தில்
விழுந்துருளும் தமிழனிடை விழிப்புண் டாக்கி,
மொழிப்பற்றை உளம்புகுத்தி மூதறிவைப் புலம்பதித்து
முழுவெழுச்சி கொளச்செய்து முன்னேற் றத்தின்
வழிப்பற்றில் நடையூன்றி வாழ்க்கையிலே கைவிளங்கி
வளங்கொழிக்கும் விடிவுலகம் வருவாய் என்றே
கொழிப்புற்ற செந்தமிழில் குரல்கொடுப்போம்!
விறல்எடுப்போம்!
குலைவின்றித் தமிழ்மக்காள் கூடு வீரே!

டி : 17
: 2
ஆசிரியர்
பெருஞ்சித்திரனார்
விலை
உருபா 1-25

www.thamizham.net - Free E book No 7503

நமக்கு வந்த மடல்கள்.

0:798: ஆரா அன்பு கொண்ட ஆசிரியர் அவர்கட்கு, வணக்கம். வாழ்வியலை நிலைப்பெயர்த்தி வளப்படுத்தும் பணியில் **தமிழ்ச் சிட்டின் பணி** குன்றின் மேலிட்ட விளக்காகும் கடந்த கடகத் திங்கள் இதழில் (குரல் 12, இசை 3-இல்) 5-ஆம் பக்க அண்ணா மலைப் பல்கலைக் கழக அகர முதலி பற்றிய அறிவிப்பைக் கண்டு மகிழ்ந்தேன். 'தமிழ்மொழிக்கு' யார் பெயரால் அல்லது யாரால் ஆளுநரும் அல்லது எந்தப் பல்கலைக் கழக வழியாகவும் அகர முதலி வெளி வரலாம். அவை தமிழ்க்கு அடியறுப்பு வேலை செய்யாதிருந்தால், வெளியிடப் பெற்றால், பாராட்டி வரவேற்போம். சென்னையில் இருந்து வெளிவரும் பிற இதழ்களில், சென்னையில் (தமிழ்நாட்டரசின் செந்தமிழ்ப் பேரகர முதலி) உருவாகி வரும் அகர முதலி பற்றிய செய்தியையே காணோம். தாங்களாவது அவ்வகர முதலி குறித்தும் அதனை உருவாக்கும் செந்தமிழ் ஞாயிறைப் பற்றியும் **அண்மைக்கால செய்திகளை** ஒரு நேர்காணல் வழி எம் போன்றவர்க்கு அறிவித்து உதவுவீர்களாயின் பெருநன்மை உண்டு; பெருமை உண்டு. **— அறவாழி, நெய்வேலி-3.**

C:799: வணக்கத்திற்குரியீர் ஐயா, தமிழ், தமிழின மீட்சிக்கு நீங்கள் ஆற்றிவரும் அரும்பணிகள் போற்றுதற்குரிய—பின்பற்றத் தக்கனவாகும். அவ்வழி நம்மின மீட்சிக்குதவும் தங்கள் பாடல்கள் பலவற்றை எடுத்தாண்டு அந்தமான் முரசில் மறு பதிப்புச் செய்து வருவது நீங்கள் அறிந்த ஒன்றே. மற்று, செனகால் நாட்டுப் பல்கலைக் கழக மாந்தவியல் ஆய்வாளர் பண்டாரகர் அறவாணன் அவர்கள் சூலைத் திங்கள் இறுதிக் கிழமையில் எங்கள் தீவுக்கு வருகை தந்தார்கள். 'அந்தமான் தமிழர் சங்க'த்தில் சிறப்புரையொன்று ஆற்றினார்கள். நம்மவர்கள் பலரின் மயக்கம் களைய அவ்வுரை உதவியது என்பதில் எமக்கெல்லாம் மகிழ்ச்சியாக இருந்தது. அதுபோது தங்களைப் பற்றியும் தங்களின் செம்மாந்த தூய தமிழ்ப் பணி குறித்தும் எமக்கு விளக்கினார்கள்.

சூலை—ஆகத்து 80 தென்மொழி இதழ் கண்டேன். தமிழக விடுதலைக்குப் பாடுபட கலைஞருக்கு நீங்கள் விடுத்திருந்த அழைப்பு மிகவும் சிந்தனைக்குரியதும், காலத்தின் தேவையை நவில்வதுமாகும். எல்லாத் தளைகளிலிருந்தும் விடுபட்டுத் தமிழ் கூறும் நல்லுலகின் மீட்சிக்குத் தலைமை ஏற்க வேண்டியது கலைஞரின் தவிர்க்க முடியாத கடப்பாடுகளில் ஒன்றென நீங்கள் எடுத்தோதியிருந்ததைக் கடல் கடந்து வாழும் என்போன்றோர் மன நிறைவாக வரவேற்கிறோம்: தமிழக வரலாற்றில் தமிழர் தம் வாழ்வில் சூழ்ந்துள்ள கருங்கொண்டல்கள் மறைந்து ஏதுமற்றுக் கிடக்கும் நம்மினத்தைப் புதிய கோணத்தில் வழி நடத்த கலைஞருக்குத் தகுதியுண்டு. அதனை அவர் செய்ய வேண்டுமென எதிர்பார்ப்போம். தங்களின் வேண்டுகோளைப் பின் பற்றி முரசிலும் திறந்த மடல்

www.thamizham.net - Free E book No 7503

‘தினமணிக் கதிரின்’ சாதிவெறித் தூண்டுதலை முதலமைச்சர் உடனே தடுத்து நிறுத்தவேண்டும்!

‘தினமணிக் கதிர்’ என்னும் இதழ், தன் விற்பனையைப் பெருக்கும் நோக்கத்துடன், மக்களிடையே, திரவிட இயக்கங்களின் கடந்த அரை நூற்றாண்டுக்கும் மேலான அரிய முயற்சியால், ஓரளவு மறைந்து வருகின்ற சாதியுணர்வைத் தூண்டிவிடும் வகையில், சாதியின் பெயரால் சிறப்பிதழ்களை வெளியிட்டு வருவதும், அவ்விதழ்களை வெளிக் கொணர்வதற்கும் அதன் ஆக்கத்திற்கும் உதவும் வகையில் அவ்வச் சாதிகளைச் சேர்ந்த பேதையினரும். சாதி வெறியினரும், தங்கள் தங்கள் சாதிகளைப் பற்றிய செய்திகள், தங்கள் சாதிகளைச் சேர்ந்த ‘பெரிய’ ‘பெரிய’ அறிவாளித்தனங்களை-செல்வத் தனங்களைக் கொண்ட மக்களைப் பற்றிய விளத்தங்களை யெல்லாம் பெருமை(!)யுடன் எழுதி அனுப்புவதும், பின்னர் அவ்விதழ்கள் வெளியானதும் அவற்றைப் போட்டியிட்டுக் கொண்டு படிப்பதும், இதனால் அவ்விதழ் நிறுவனர் கொள்ளை ஊதியம் அடித்துக் கொழுப்பதும் நடுவூரில் நச்சுமரம் செழிப்பதுபோல் நாளும் நடந்து வருகின்றன. இச் செய்தியை அரசு உள்பட அனைவரும் அறிவர்.

ஆனால், பெயருக்காகவும், ஏதுமறியாப் பொதுமக்களை ஏமாற்றுவதற்காகவும் என்றே, பெரியாரின் பெயரால் கடந்த ஓராண்டுக் காலமாக விழாக் கொண்டாடிக் கொட்டமடித்த அமைச்சர்களும் அதிகாரிகளும், அவரின் சாதியொழிப்புக் கொள்கைக்கு நேர்மாறாக நடந்து வரும் இக் கொடுமையான உணர்ச்சிப் பரவலையும், மக்களின் மென்மையுணர்ச்சிகளைத் தூண்டிப் பணம் பறிக்கும் இப் பகற்கொள்ளையடிப்பையும், கண்டுங் காணுதவர் போல், அல்லது தடுத்து நிறுதத உள்ளவுரம் அற்றவர்கள் போல், வாய்வாளாத ஊமைகளாய் வேடிக்கை பார்த்து வருகின்றனர்.

அவ்வாறின்றி, அவர்கள் இதுவரை, இது பற்றி ஏதும் அறியாதவர்களாயிருப்பின், இன்றே அதுபற்றி உடனடியான நடவடிக்கை எடுத்து, அவ்விதழ் அவ்வாறு சாதி வெறியை வளர்க்கும் முயற்சியைத் தடுத்து நிறுத்தவேண்டும். முதலமைச்சர் இதுபற்றித் தனிக் கவனம் செலுத்த வேண்டுமெனக் கேட்டுக்கொள்கிறோம். இல்லெனின் அவ்விதழின் அப் போக்கைக் கண்டிக்கும் நோக்கத்துடன், தென்மொழி பெரிய போராட்டத்தை நடத்தவேண்டி வரும் என்று எச்சரிக்க விரும்புகிறோம்.

இளைதாக முள்மரம் கொல்க; களையுநர்
கைகொல்லும் காழ்த்த விடத்து.

பின் குறிப்பு : ஆங்காங்குள்ள தென்மொழி யன்பர்களும், பிற பொதுநல ஆர்வலர்களும் இவ்வறிக்கையை ஆயிரக்கணக்கில் அச்சிட்டுப் பரப்புக. அமைச்சர்களுக்கும் அனுப்பி வைக்க. பெரிய பெரிய தட்டிகளில் எழுதிப் பொது விடங்களில், பொது மக்களின் பார்வைக்கெனவும் வைக்க.

www.thamizham.net - Free E book No 7503

கெஞ்சுவதில்லை பிறர்பால்,
அவர் செய் கேட்டினுக்கும்
அஞ்சுவதில்லை; மொழியையும்
நாட்டையும் ஆளாமல்
துஞ்சுவதில்லை" எனவே
தமிழர் தோளெழுந்தால்
எஞ்சுவதில்லை உலகில்
எவரும் எதிர்நின்றே!

சுவடி: 17 ஓலை : உ.
[நிறுவனம் தி. பி. 1990 (1959)]
கன்னி. தி. பி. உ௰கக-
செப்-அக்-1980.

தென்மொழி

பொறுப்பாசிரியர்: பெருஞ்சித்திரனார்
புரப்பாசிரியர்கள்
தென்மொழி முல்லைவாணன் (சிங்கை)
தென்மொழி மறை. நித்தலின்பனார் (தமிழ்நாடு)
தென்மொழி. ந. முத்துக்குமரன் (தமிழ்நாடு)
தென்மொழி மின் அச்சகம், சென்னை-5, தமிழகம்
அமைச்சர்: அழ. இளமுருகன், அறி. இ
[பெயரின்றி வரும் அனைத்துப் படைப்புகளும் பொறுப்பாசிரியரால் எழுதப்பெறுவன]

சாதி யொழிப்புக்கு ஒரு திட்டம்!
(அரசினர் - பொதுமக்களின் பார்வைக்கு)

சென்றவிதழ் ஆசிரியவுரையைப் பார்த்த பலரும் பல மடல்களை நமக்கு எழுதியிருந்தனர். சிலர் நேரில் அது குறித்து உரையாடினர். அவருள் மிகப் பலர் சாதியொழிப்பு குறித்து நம் கருத்துக்களைப் பலவாறு ஒட்டிப் போற்றினர். சிலர், சுற்றி வளைத்து, அஃது ஒழிய அல்லது ஒழிக்க விரும்பாத மனத்தினராகவும், சிலர், அதனால், இக்கால் கிடைத்து வரும் சலுகைகளைத் துறக்க விரும்பாத நிலையினர் அல்லது உளத்தினராகவும், இன்னும் சிலர், அதை ஒழிப்பதில் உள்ள இடர்ப்பாடுகளையும் இயலாமைகளையும் கூறி, அதன் முயற்சி வெறுமையைச் சுட்டினராகவும் பலவாறும் பற்பல வகையான கருத்துகளை நமக்கு எடுத்துக் கூறினர். ஆனால், ஒட்டு மொத்தத்தில், இப்பொழுதுள்ள நிலையில், சாதி ஒழிய வேண்டாம் என்று கருத்துக் கொள்ளும் வஞ்ச நெஞ்சினரும், காராண்மையரும்,

www.thamizham.net - Free E book No 7503

கயவரும், குமுகாயக் கொடியவர்களும், இவ்விருபதாம் நூற்றாண்டு அறிவியல் காலத்திலும், ஏராளவில், இருக்கவே செய்கின்றனர் என்பது மிகவும் வருந்துவதற்கும், நாம் மேற்கொண்டு வலிந்து உடனடி முயற்சி செய்வதற்கும் உரியதாக விருக்கின்றது.

முதலாளியக் குமுகாய உள்ளரிப்பு நிலைபோல், சாதி யுணர்வும் நிறவெறியும் ஒருவகை முதலாளியக் கோட்பாடே யாகும் என்பதை அனைவரும் நன்கு தெளிந்து கொள்ளுதல் வேண்டும். அறியாமைப் பின்பற்றுதலாலும், பிறரை அடக்கியாளல் வேண்டும் என்னும் அகஇறுமாப்பாலும், ஆளுமைச் செருக்கினாலும், சாதிகளால் கிடைத்து வரும் சலுகைகளை விட மனமின்மையாலுமே, சாதிகள் இருப்புக்குக் கட்டியங் கூறி, நேரிடையாகவோ, மறைமுகமாகவோ, எழுதியும் பேசியும் வருகின்றனர் சிலர். சிலரோ, மானமிழப்புக்கும் பொருளிழப்புக்கும் வேற்றுமை உணராது, பொருள் நயப்பால் சாதிச் சகதியுள்ளேயே புதையுண்டு போக விரும்புகின்றனர். நமக்கு வந்த மடல்களுள் ஒன்று, இத்தகைய கருத்தை வலியுறுத்தி, நாம் பார்ப்பனியத்திற்காக வழக்காடுவதாகக் குறைசுட்டியிருந்தது. சாதியொழிப்புக்கு நாம் கூறும் மாற்றுத்திட்டம் என்னவென்றும் கேட்டிருந்தார் அம்மடலை எழுதியவர். ஆனால் அந்த மடலில் எழுதியவர்பெயரும் முகவரியும் இல்லாமலிருந்தது, அதை யெழுதியவரின் கோழைமையை யும் ஏழைமையையும் நமக்குப் புலப்படுத்திக் காட்டியது. இத்தகையவர்களால் என்றுமே எதுவுமே செய்து விட முடியாது என்பதை நாம் நன்கு அறிவோம். எனவே, இவை பற்றி யெல்லாம் பேசிக் கொண்டிராது, சாதியமைப்பு, அறிவியல் சான்ற குமுகாயப் பொது நிலை மீமிசை மாந்த முன்னேற்றத்திற்குப் பெரும் முட்டுக்கட்டையும் இழிவும் ஆகும் என்னும் கருத்தே மேனிலையாக்கம் கொண்ட கருத்தாதலின், அதன் ஒழிப்புநிலை பற்றி மிகச் சுருக்கமாக, இக் கட்டுரைக்கண் ஒரு திட்டம் அமைத்துத் தருவோம். அரசினர்தாம் இதனைச் செயல்படுத்துதற்குரியவர் எனினும் பொதுமக்களும் புலமக்களும் அதற்குத் துணையாக நிற்பது மிகமிக இன்றியமையாததாகும்.

முதற்கண், ஒரு தீமையை, அதுவும் நீண்ட நெடுங்காலமாக நம் உள்ளத்திலும், உணர்விலும், ஏன், உடலிலும் கூட, பற்றுப் படையாகவும் ஒட்டுண்ணியாகவும் படர்ந்து, நம்மை அதுவும், அதனை நாமும் விடுதலறியா விருப்பத்துடனும், விட்டு விலகா மனத்துடனும் தொடர்பு கொண்டுள்ள சாதிச் சுவையை அல்லது மயக்கத்தை, அல்லது செருக்கை — ஒழிக்க வேண்டும் என்றால், சில நலன்களைக் கூட — சலுகைகளையும் சேர்த்தே குறிப்பிடலாம் — நாம் இழந்தே ஆகல் வேண்டும். அடிமைச் சுவை நலன்களைப் போல் சாதிச் சுவை நலனும் மானமிழப்பை உணரச் செய்யாமல் உள்ள மனம் மரத்துப் போன உணர்வுடையதே! எனவே நெடுநாள் பழக்

www.thamizham.net - Free E book No 7503

கத்தை விட்டு விலகும் மன ஆற்றுமை அதிலும் உண்டு. ஆனாலும் அறிவும் உணர்வும் வளரப் பெற்றவர்களாக. தாமே அச் சாதிப் பிடிப்பினின்று விலகும் நல்லுணர்வாளர்களைத் தவிர மற்ற அல்லுணர்வாளர்களை அரசு கழுத்தைப் பிடித்தேனும் நெட்டித் தள்ளிக்கொண்டு, சாதிக் கோட்டுக்கு வெளியே கொணர்ந்து நிறுத்தத்தான் வேண்டும். இஃது ஒரு பனிமலைப் பெயர்ப்பு முயற்சிதான். ஆனாலும் அணுவாற்றல் மிகுந்த இவ்வூழியுள் அதனை எவ்வாறேனும் செய்தேயாகல் வேண்டும்!

சாதியொழிப்புக்கு இதுவரை ஏற்பட்ட அறநூலாக்கங்கள் குமுகாய மேம்பாட்டு ஒழிப்புரைகள், வேண்டுகோள்கள், விளம்பரப் பரப்பல்கள் என்னும் பலவற்றைவிட, அதற்காகச் செய்யப்பெற்ற முயற்சிகள் மிகமிகக் குறைவே. அதுவும் சாதியொழியாததற்கு ஒரு பெருங் கரணியம் ஆகும். சாதியுணர்வுக்காளான நூறு கோடிப் பெயர்களுள் ஒரு பத்தாயிரம் பெயர்களே சாதியொழிப்புணர்வு கொண்டுள்ளனர். அப் பத்தாயிரத்துள் ஓர் ஆயிரம் பெயர்களே சாதியொழிப்பு பற்றிப் பேசுகின்றனர்; அவ்வாயிரத்துள் பத்துப் பெயர்களே ஏதேனும் முயற்சி செய்கின்றனர்; ஓரிருவரே சாதியுணர்வை யொழித்துப் புது மாந்த இனத்துள் தங்களையும் உறுப்பினர்களாக்கிக் கொள்கின்றனர். எனவேதான் சாதியுணர்வு நகர்த்த வியலாத சண்டிமாடு போல் நம் முன்னேற்றப் பாதையுள் ஆழக் குழிபறித்துக் கொண்டு படுத்துக் கிடக்கின்றது.

இனி, சாதியுணர்வும், பொருளியல் பின் தங்குதலும் ஒன்றையொன்று இணைத்துப் பிணைத்துக் கைகட்டிக்கொண்டு ஒத்து நடையிடுவதால், இரண்டில் ஒன்றைப் பிரித்து அதற்கு விடுதலை யளிப்பது, இயலாத ஒரு பெரும்பாடாக விருகின்றது; அவற்றுக்காகத் தனித்தனி முயற்சி செய்பவர்களிடம் ஒரு சோர்வை யுண்டாக்குகின்றது. எனவே. ஒன்றினால் மற்றொன்று தடைப்படாத ஒரு வகைத் திட்டத்தையே நாம் தெரிவு செய்து செயல்படுத்த வேண்டியுள்ளது. இதுவரை சாதியொழிப்புக்குக் கலப்பு மணம், மன மாறுபாடு, கருத்துப் பரப்புதல் முதலிய பல திட்டங்களையும் அறிஞர்கள் அறிமுகப்படுத்தியும் ஓரளவு செயற்படுத்தியும் வந்துள்ளனர். இவற்றுள் மன மாறுதல் என்பது, அறிவும் பொதுமையுணர்வும் வளர வளர உருவாவது. இதுநாள் வரையும் இனியும் இம் முயற்சிகள் தொடர்ந்து நடைபெற்று வந்ததும் வருவதும் இன்றியமையாததே! நாகரிகமும் பண்பாடும் வளர்ந்த நிலையில் இம் மனவுணர்வு சிறிது சிறிதாக நெகிழ்ச்சி கொள்வதும் உண்மை. இது தவிர, இன்றைய நிலையில் சில அரசு முயற்சிகள் தேவைப்படுகின்றன. அது தொடர்பாக இங்கே தரப்பெறுகிற நன்கு புலனாய்ந்த ஒரு செயல் முறைத் திட்டம் உண்மையிலேயே வினையாக்கத்திற்கு வருமானால் நல்ல பயன் விளையும் என்று நாம் மனமார நம்புகின்றோம். அத் திட்டம் இது :

www.thamizham.net - Free E book No 7503

இச் சாதியொழிப்புத் திட்டம் ஐந்து படிநிலையாகச் செயல் படுத்தும் முறைகளைக் கொண்டது. அவற்றைப் படிப்படியாகப் பார்ப்போம்.

1. **புறநிலைச் சீராக்கங்கள் :** (முதல்நிலை—ஐந்தாண்டு) இத் திட்டம் செயலுக்கு வந்த நாள் முதல் ஐந்தாண்டுகள் முயற்சி பற்றியது இது

1. சாதிப் பெயர்களைத் தம் பெயர்களுடன் இணைத்து எழுதுவ தற்குத் தடை யிடுவது. 2. சாதிப் பெயர்கள் இணைந்த வீட்டுப் பெயர்கள், கடைப் பெயர்கள், நிறுவனப் பெயர்கள், அறக்கட்டளைப் பெயர்கள், பள்ளி, கல்லூரி பல்கலைக் கழகப் பெயர்கள், தெருப் பெயர்கள் சிற்றூர்ப் பெயர்கள், ஊர்ப் பெயர்கள் முதலியவற்றிற் குத் தடையிட்டு, அவற்றை மாற்றியமைப்பது. 3. சமயத் தொடர் பான சாதி விழாக்கள், சாதி தெய்வங்கள், இவற்றுக்குத் தடை யிடுவது. 4. சாதிகள் தொடர்பான ஒட்டுமொத்த இணைப்பு முயற்சிகள், கூட்டங்கள், மாநாடுகள், சிறப்பு வெளியீடுகள் முதலி யற்றிற்குத் தடையிடுவது. 5. பள்ளி, கல்லூரிப் பதிவுகளில் சாதிப் பெயர்ப் பதிவுகளை நீக்கி, பின்வரும் திருத்த நிலைகளுக்கு ஏற்பக் குறியீடுகளை இடுவது. இவற்றை முதல் ஐந்தாண்டுக்குள் செய்து முடித்துக் கொள்ளுதல் வேண்டும். 6. சலுகை முறைக் கல்வி, தொழில் ஈடுபாடுகளை முதல் ஐந்தாண்டில், அதை விரும்பி வேண்டு வோர் கருத்துக்கிணங்க இன்றுள்ள நிலைகளை அப்படியே தொடரச் செய்யலாம்

2. **அகநிலைச் சீராக்கங்கள் :** (இரண்டாம் நிலை—ஐந் தாண்டு.) கல்வி, தொழில் முறை ஏற்பாடுகளில் மக்களைக் கீழ் வரும் **நான்கு நிலைப்** பொருள், இன பகுப்புகளாகப் பகுத்து முன் னேறுவதற்குரிய சலுகைகளைத் தருதல்.

1. **மிக முன்னேறியவர்கள்** (மி. மு. ஏ.): சாதியாலும் பொருளியலாலும் முன்னேறியவர்கள். இவர்களுக்கு வகைக்கு இரண்டிரண்டு கூடுதல் எண்கள் மேனி நான்கு எண்கள் (+2+2 = +4) தரப் பெறுதல் வேண்டும்.
2. **முன்னேறியவர்கள்** (மு ஏ.): சாதி, பொருளியல் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் மேம்பட்டு நிற்ப வர்கள் (இவர்களுக்கு இரண்டு கூடுதல் எண்கள் (+2) தரப் பெறுதல் வேண்டும்.)
3. **பின் தங்கியவர்கள்** (பி. த.): சாதி, பொருளியல் இவற்றுள் ஏதேனும் ஒன்றில் பின்தங்கி நிற்பவர்கள். (இவர்களுக்கு இரண்டு குறைதல் எண்கள் (—2) தரப் பெறுதல் வேண்டும்.)
4. **மிகப் பின் தங்கியவர்கள்** (மி. பி. த.): (சாதி யாலும் பொருளியலாலும்) (இவர்களுக்கு இரண்டி

www.thamizham.net - Free E book No 7503

ரண்டு குறைதல் எண்கள் (—2, —2 = —4) தருதல் வேண்டும்.

இந்த எண்கள் அடிப்படையில் அவர்களுக்குத் திட்டமிடப் பெற்ற சலுகைகள் தரப் பெறுதல் வேண்டும். இவர்களின் தரத்துக்கு அடையாளமாகக் கல்வி, தொழில் வகைச் சான்றிதழ்கள் இந்நான்கு வகையான எண் குறியீடுகளே இடம்பெறுதல் வேண்டும் மற்றும் இவர்களுக்கான சாதிக் குறியீடுகளின் முதற் பதிவை மிகக் கமுக்கமாக வைத்தல் வேண்டும். (எ - டு)

1. நலங்கிள்ளி (+4) 3. நெடுஞ்செழியன் (—4)
2. சேரலாதன் (+2) 4 இளங்குட்டுவன் (—2)

3. அகநிலைச் சீராக்கங்கள் (மூன்றாம் நிலை—ஐந்தாண்டு): இரண்டாம் ஐந்தாண்டுப் பதிவாளர்களை மறு ஆய்வு செய்தும், பிறரைப் புதுமுறையிலும், கீழ்க்காணும் வகையில் **இரு நிலை பொருள், இன** மக்கள் பகுப்புகளாகப் பிரித்து முன் போலவே எண் குறியிட்டு, முன்னேற்றத்துக்குரிய சலுகைகளைத் தருதல் வேண்டும்.

1) மிக முன்னேறியோர் (மி.மு.ஏ): சாதி + பொருள் = +4.
2) மிகப் பின்தங்கியோர் (மி.பி.த): சாதி + பொருள் = —4.

4. அகநிலைச் சீராக்கங்கள் (நான்காம் நிலை—பத்தாண்டு): மூன்றாம் ஐந்தாண்டுப் பதிவாளர்களை மறு ஆய்வு செய்தும், பிறரைப் புது முறையிலும், கீழ்க்காணும் வகையில் இரு வகைப் **பொருள் வகை** மக்கள் பகுப்புகளாகப் பிரித்து முன் போலவே எண் குறிகளடிப்படையிலே முன்னேற்றத்துக்குரிய சலுகைகளைத் தருதல் வேண்டும்.

1) அரசுதவி தவிர்த்தோர் (அ. உ. த): பொருள் நிலை மட்டும் (+)
2) அரசுதவி பெறுவோர் (அ. உ. பெ): பொருள் நிலை மட்டும் (—)

4. 25 ஆண்டுகளுக்கு மேல், நான்காம் நிலை: பொருள் நிலைச் சலுகைகளைத் தேவையானால் மேலும் ஒரு குறிப்பிட்ட காலத்திற்குத் தொடர்ந்து தரலாம். அல்லது நீக்கலாம்.

ஆனால் மேற்குறித்த 25 ஆண்டுக் காலத்திற்குள் சாதியுணர்வுகளும் பெயர்களுமே ஒழிந்து போய்விடும். மொழி தழுவிய தேசிய இனப் பெயர்களே (தமிழர், ஆந்திரர், கன்னடர் முதலியவை) நிற்கும். புதிய பொருள் நிலைக் குழுகாயந் தோன்றிவிடும்.

இத் திட்டம் பொதுமக்கள் கவனத்துக்கும், அரசுப் பார்வைக்கும் வந்து, மேற்கொண்டு விளக்கங்கள் கேட்கப்பெறும் பொழுது விரிவாகவும் விளக்கமாகவும் நடைமுறை வடிவாக்கித் தரப்பெறும். இப்பொழுது இந்த அளவில் போதும் என்று கருதுகிறோம். எவ்வாறுனும் சாதித் தொடர்பான அனைத்து நிலைகளும் நம் காட்டுவிலங்காண்டித்தனத்தையே காட்டுவன எனும் உணர்வு நம்மிடையே வேண்டுவதாகும்.

—**பெருஞ்சித்திரனார்**

www.thamizham.net - Free E book No 7503

உண்மைகள் மேலெழுகின்றன!

'சப்பானிய மொழியில் திராவிட உள்ளியக்கம்'

(Dravidian Influence on Japanese Language)

சப்பான் — காகுசியுன் பல்கலைக் கழகப் பேராசிரியரான **சுசுமு ஓனோ**. மெய்மெய் - தென்கொரியப் பல்கலைக் கழகப் பேராசிரியரான **தாக்காத் தோசி மட்சுபாரா** ஆகிய இருவரும் சப்பானிய ஆய்வாளர்கள் ஆவர். சப்பானிய திராவிட மொழிகட்கிடையிலும், சப்பானிய - திராவிடப் பண்பாடுகட்கிடையிலும் அமைந்துள்ள ஒற்றுமைகளை உறுதிப்படுத்திக் கொள்வதற்காக இவர்கள் இருவரும் நான்கு கிழமைச் செலவை மேற்கொண்டு புதுதில்லி வந்துள்ளனர்.

அண்மையில் சப்பானிய மொழியின் தோற்றத்தை ஆராய்ந்த ஆய்வாளர்கள் சப்பானிய மொழியின் உருவாக்கத்தில் திராவிட மொழிகள் மிக முதன்மை வாய்ந்த பொறுப்பை ஏற்றிருக்கக் கூடும், என்னும் கருத்தினை முன்மொழிந்தார்கள். இச் சுவைமிக்க கோட்பாட்டை ஆராய்வதையே இவ்விருவர் குழு மேற்கொண்டுள்ளது.

பேரா. ஓனோ அவர்கள் சப்பான் மொழி —மொழியியல் ஆகியவற்றின் கருத்தாணையர் ஆவார். பேரா. மட்சுபாரா அவர்கள் சப்பானிய நாட்டுப்புறவியல், தொல்கதையியல் ஆகியவற்றின் கருத்தாணையர் ஆவார். இவ்விருவரும் திரவிட ஆய்வாளர்களை - குறிப்பாகத் தமிழறிஞர்களைச் சந்திக்கவும், தொல் திராவிடப் பழக்க வழக்கங்களுடன் வாழ்ந்து வரும் மக்களின் வாழிடங்கள் பலவற்றுக்கும் சென்று ஆய்வு நடத்தவும் திட்டமிட்டுள்ளனர்.

இவர்கள், 'ஆசாகி' (கிழமையிதழ்), 'சப்பான் ஒலிபரப்பு இணையம்' ஆகியவற்றின் படிநிகராளருடன் இணைந்து செயலாற்றுகின்றனர். இவ்வொலிபரப்பு இணையம், இத்துறையில் ஆர்வமுள்ள சப்பானிய மக்களுக்குத் தொலைக்காட்சி மூலம் காட்டுவதற்காக, இவர்களின் செய்கைகளைச் 'நிகழ்ச்சிப் படமாக்க'த் (documentary film) திட்டமிட்டுள்ளது.

இக் குழுவின் தலைவராக உள்ளவரும், சப்பான் ஒலிபரப்பு இணையத்தைச் சேர்ந்தவருமான திரு **சித்தாரு இசொகை** அவர்கள், செப்டம்பர் 13-ஆம் பக்கல் தம் குழு சென்னை வரப்போவதாகவும், மூன்று கிழமை தமிழ்நாட்டில் இருக்கப் போவதாகவும், திருச்சி, தஞ்சை, மதுரை ஆகிய இடங்களுக்குச் செல்லவுள்ளதாகவும் தெரிவித்தார்.

இக் குழு சிற்றூர் ஒன்றில் சில நாள் தங்கியிருக்கும். அங்கே, மாந்தரின் பிறப்பு, மணம், சாவு முதலியவற்றுடன் இணைந்த

www.thamizham.net - Free E book No 7503

பல்வேறு பழக்கவழக்கங்கள், நிகழ்ச்சிகள் ஆகியவற்றை, அறிஞர் இருவரும் தம் ஆய்வின் பொருட்டு உற்றுநோக்குவர்.

மேலும், உழவியற் கருவிகளையும், பிற மரபுத் தொழில்களுக் கான கருவிகளையும் அவர்கள் ஆய்வு செய்வார்கள். இதன் நோக்கம், தமிழர் – சப்பானியா பழக்க வழக்கங்களுக்கிடையேயான ஒற்றுமை வேற்றுமைகள் குறித்த தெளிவுகள் இதன் மூலம் கிடைக்கக் கூடும் என்பதுதான்.

கருதிய செய்தி குறித்த ஒரு தேடல்தான் இப்போதைய வருகை என்றும், பேரா. ஓனோ மீண்டும் சென்னையில் வந்து ஓராண்டு தங்கித் தமிழ் கற்பார் என்றும் திரு. இசொகை அவர்கள் கூறினார். மேலும் 'அறுபது ஆண்டுகள் அகவை முதிர்ந்த அவ்வாய்வாளர், தம் வாழ்வின் எஞ்சியுள்ள பகுதியைச் சப்பான் மொழிக்கும் தமிழ் மொழிக்கும் இடையேயான ஒற்றுமைகளை ஆராய்வதற்காகவே ஒப்படைத்துக் கொள்வதாக முடிவு செய்துள்ளார்' என்றும் அவர் தெரிவித்தார்.

திரு. இசொகை அவர்கள் கூறிய செய்தியின்படி, சப்பானிய ஆய்வாளர்கள் நூறாண்டுகட்கும் மேலாகத் தங்கள் மொழியின் தோற்றம் பற்றி அறிவதற்கான ஆய்வை மேற்கொண்டுள்ளனர் என்பதும், இது தொடர்பாகப் பல்வேறுபட்ட கோட்பாடுகளை அவர்கள் படைத்து அளித்துள்ளனர் என்பதும் தெரியவருகின்றன. இவ்வகையில், 'சப்பானியத்தில் திரவிட உள்ளியக்கம்' குறித்த கருதுகோள். ஆர்வத்துடன் ஆய்வு செய்ய வேண்டிய ஒன்றாக முகிழ்த்துள்ளது.

ஆய்வாளர் சிலர், 'சப்பானுக்கு அப்பால் 12000 அயிர மாத்தி ரித் தொலைவில் நிலவும் திரவிட மொழிகள் சப்பானிய மொழியில் எவ்வொறு உள்ளியக்கம் பெற்றிருக்க வியலும்' என்று வியப்படை கிறார்கள். ஆனால், மற்றொரு சாரார், சப்பானிய மொழிக்கும் தென் னிந்திய மொழிக்குமிடையே சொற்றொடராக்கம், சொல்லமைப்பு முதலானவற்றில் ஒற்றுமைகள் இருக்குமானால், அது வியக்கத் தக்கது ஆகாது எனக் கருதுகிறார்கள்.

சப்பான் மொழியின் தொன்மைக்காலக் கூர்தலற வளர்ச்சிக் கட்டங்களில் திரவிட மொழித்தாக்கம் நேர்ந்திருப்பதற்குரிய வாய்ப்புக் கூறுகளைப் பேரா. ஓனோ அவர்களின் ஆய்வுகள் வெளிப் படுத்தியுள்ளன. ஏறத்தாழ 500 சப்பானியச் சொற்களும் வழக் காறுகளும் தமிழில் உள்ளது போலவே இருத்தலை இவர் தெளி வாகச் சுட்டிக் காண்பித்துள்ளார்.

—'இந்து' இதழ்ச் சிறப்புச் செய்தியாளர் (புதுடில்லி).
—நன்றி 'இந்து' (கோவை —12-9-80 வெள்ளி; பக்-16.
—தமிழாக்கம் : இரணியன்.

www.thamizham.net - Free E book No 7503

என் இலங்கைச் செலவு

—பெருஞ்சித்திரனார்.

யாழ்ப்பாணம் தொடர் வண்டி நிலையத்தில், கொழும்பு, கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றப் பொருளாளர் திரு. சாம்பசிவன் அவர்கள் எங்களுக்காகக் காத்திருந்தார். அவர் கொழும்பிலிருந்து எங்களை அழைத்துப் போக வந்தாராம். திரு. சாம்பசிவன் அவர்கள் அருமையான நல்ல அன்பர். முக மலர்ச்சியோடு கலகலவென்று என்னுடன் உரையாற்றினார். கொழும்புவில் உள்ள தமிழன்பர்கள் என் வரவை மிக ஆர்வத்துடன் வரவேற்பதாகக் கூறினார். கொழும்புக்குப் போகும் தொடர் வண்டி காலை 6-30 மணிக்குப் புறப்பட்டுப் பிற்பகல் 3 மணியளவில் கொழும்புச் சந்திப்பை அடைந்தது. கொழும்புக்கும் யாழ்ப்பாணத்திற்குமிடையில் ஏறத்தாழ 250 கற்களிருக்கும். தொடர் வண்டி நம் நாட்டுச் சிறப்புத் தொடர் வண்டியை விட நன்றாக விருந்தது. எல்லா வகுப்பு இருக்கைகளும் சாய்மணைகளும் மெத்தையிடப் பெற்றிருந்தன. வண்டி தூய்மையாகவும் இருந்தது. அறிவிப்புப் பலகைகள் வண்டி நிலையப் பெயர்ப் பலகைகள் சிங்களத்திலும் தமிழிலும் ஆங்கிலத்திலும் இருந்தன. சில பலகைகள் முன்னிரண்டு மொழிகளிலுமே எழுதப் பெற்றிருந்தன.

17. கொழும்பு, பம்பலப்பிட்டி நிகழ்ச்சி

வண்டி கொழும்பு நிலையத்தை யடைந்தவுடன் நேரே அல்சு டோப் தெருவிற்கு மகிழுந்தில் அழைத்துச் சென்றார்கள். அங்குள்ள ஒரு வீட்டில் தங்கச் செய்தார்கள். அது யாழ்ப்பாணத்தில் உள்ள சந்திரசேகரன் என்பார் பொறுப்பில் உள்ள வீடு. அதன் ஒரு பகுதியில் பாண்டியன் என்பவர் குடியிருந்தார். அவர் தஞ்சை மாவட்டத்தினர். பாண்டியனோடு அவர் குடும்பமும் இருந்தது. சந்திரசேகரன் 'விசயா அச்சகம்' என்றோர் அச்சகம் வைத்திருக்கிறார். யாழ்ப்பாணத்தில் அவர் குடும்பம் இருந்தது. கிழமைக்கு ஒருமுறை யாழ்ப்பாணம் போய் வருவார். மீதி நாட்களில் கொழும்பில் இருந்து அச்சகத்தைக் கவனித்துக் கொள்வார். பாண்டியன்; அவருக்குத் தொழில் துணைவராக இருக்கிறார். அனைவரும் சேர்ந்து 'கலைஞர் கருணாநிதி பொதுப்பணி மன்றம்' என்ற பெயரில் ஒரு மன்றம் அமைத்து, ஓய்வு நேரங்களில் தமிழ்த்தொண்டும், தமிழினத் தொண்டும், நாட்டுத் தொண்டும் செய்து வருகின்றனர். மன்றம் நான் தங்கியிருந்த வீட்டில்தான் இருந்து செயல்பட்டு வருகின்றது. சந்திரசேகரன் தீவிரப் பெரியார் பற்றாளர். திராவிட கழகத்தினர். பாண்டியனும் அப்படியே. மன்றத்திற்குத் தலைவராக திரு. நவசோதி இருக்கிறார். செயலாளர் பாண்டியன். நவசோதி அரசுத் துறையில் பணியாற்றுகிறார். நல்ல எழுத்தாளர்; ஆய்வாளர்.

www.thamizham.net - Free E book No 7503

மன்றச் சார்பாக ஒரு சிறு இதழும் வெளியிட்டு வந்துள்ளார். இது வன்றி வேறு சில நூல்களும் வெளியிட்டுள்ளார். இலங்கைத் தமிழர்களிடம் உள்ள நாட்டிசைப் பாடல்கள் பற்றி ஆராய்ந்து, சென்னையில் நடைபெற்ற உலகத் தமிழ் மாநாட்டில் கட்டுரை படித்துள்ளார். நல்ல இலக்கிய ஆர்வலர். அவர் தமிழ்நாட்டிற்குப் பலமுறை வந்துள்ளார். ஒருமுறை தென்மொழிக்கும வந்துள்ளார். இனிமையாகப் பழகும் அருமையான பண்பினர். நல்ல அன்புள்ளம் கொண்டவர். தமிழ்நாட்டிலிருந்து செல்பவர்களை அன்புடன் வரவேற்று விருந்தோம்பும் இனிய தன்மையினர்.

நான் கலைஞர் பொதுப்பணி மன்றம் உள்ள வீட்டை அடைந்தவுடன் அனைவரும் வந்து ஆர்வத்துடன் வரவேற்றனர். திரு நவசோதி என் வரவால் மிகவும் மகிழ்வடைந்தார். அன்று மாலை நடைபெற விருந்த கூட்ட அறிக்கையினையும், கூட்டம் பற்றிச் செய்தி வெளியாகி யிருந்த செய்தித் தாள்களையும் கொணர்ந்து கொடுத்தார். பொன்கொடு தீவில் திருக்குறள் மாநாட்டில் நான் பேசிய பேச்சுகளெல்லாம் செய்தித் தாள்களில் மிகப் பெரிய அளவில் வெளியாகியிருந்தன. அந்தத் தாள்களையும் திரு நவசோதி என்னிடம் கொடுத்துப். பேச்சுகளைப் பாராட்டிப் பேசிக் கொண்டிருந்தார். முன் நாள் இரவில் 10 மணியளவில், திருக்குறள் மாநாட்டில் முதல் நாள் பேசிய உரையை, இலங்கை வானொலி ஒலிபரப்பியிருந்ததாகவும்' அதைத் தாங்கள் கேட்டு மகிழ்ந்ததாகவும் சாம்பசிவமும் பாண்டியனும் சொன்னார்கள். நாங்கள் அதைக் கேட்க வாய்ப்பில்லை. அதன் பின்னர் நானும் இராமலிங்கமும் குளித்து விட்டு உணவை முடித்துக்கொண்டு ஓய்வு கொண்டோம். மாலை 6 மணியளவில் பம்பலப்பிட்டி, கதிரேசன் மண்டபத்தில் 'தமிழர் பெருவாழ்வு' என்னுந் தலைப்பில் சொற்பொழிவு ஏற்பாடாகியிருந்தது.

மாலை 5-30 மணியளவில் திருவாளர்கள் சந்திரசேகரன், நவசோதி, சாம்பசிவன், பாண்டியன் என்னுடன் வந்திருந்த இராமலிங்கம் ஆகியோருடன், ஒரு மகிழுந்தில் பம்பலப்பிட்டி புறப்பட்டோம். பம்பலப்பிட்டி நான் தங்கியிருந்த இடத்திலிருந்து ஆறேழு கல் தொலைவிலிருந்தது. விரைந்து போய்விட்டோம். 6-30 மணியளவில் அங்குள்ள கதிரேசன் மண்டபத்தில் நிகழ்ச்சி தொடங்கியது. நிகழ்ச்சிக்கு அண்டையயல் ஊர்களிலிருந்தெல்லாம் அறிஞர்களும் அரசுப் பணியாளர்களும் அன்பர்களும் மண்டபம் நிறைய வந்திருந்தனர். கதிரேசன் மண்டபம் மிக அழகிய மண்டபம் சொற்பொழிவுகளுக்கும் கலை நிகழ்ச்சிகளுக்குமாகச் சிறப்புற அமைக்கப் பெற்றிருந்தது, அது. அழகிய, பெரிய மேடை. ஒலி, ஒளி அமைப்புகளெல்லாம் நிறைவுற நிலையாக அமைக்கப் பெற்றிருந்தன. ஐநூறு பேர் உட்காருமளவிற்கு மெத்திருக்கைகள் போடப் பெற்றிருந்தன. தொடக்கத்தில் பின்புறம் உள்ள நாற்

www.thamizham.net - Free E book No 7503

காலிகள் சில மட்டும் வெறுமனே இருந்தன நிகழ்ச்சி தொடங்கிச் சிறிது நேரத்திற்கெல்லாம் அவையும் நிறைந்து காணப் பெற்றன. ஒரு சிறு ஒலியும் மண்டபம் முழுவதும் பரவலாகவும் மிகத் தெளிவாகவும் கேட்கும்படி அதன் அமைப்பு இருந்தது. எதிரொலி சிறிதும் இல்லை. அரங்க அமைப்பு மிகச் சிறப்பு. நான் பேசிய இரண்டு மணி நேரமும் கூட்டத்தில் ஒரு சிறு அரவமும் இல்லை. அவ்வளவு அமைவாக அவையம் இருந்து கேட்டது. பேச்சு மிகவும் ஈர்ப்பாக விருந்தது. உணர்வுப் பிழிவாக அமைந்திருந்தது. ஒவ்வொருவரிடமும் தனித்தனியாகப் பேசுவது போல் அவ்வளவு ஈடுபாடாக விருந்தது. நான் உரையாற்றிய சில குறிப்பிடத் தகுந்த சொற்பொழிவுகளில் இங்குப் பேசியதும் ஒன்று. சிங்கை சென்றிருந்தபொழுது, அங்குள்ள தேசிய நூலகத்திலும் (National Library) மலேசியா சென்றிருந்த பொழுது எப்போவிலும் இதுபோல்தான் அரங்குகள் அமைந்திருந்தன. பேசுபவர் கவனம் முழுவதும் தாம் ஆற்றுகின்ற உரையிலேயே உறைத்து நிற்குமாறும், ஒரு சிறிதும் எண்ணச் சிதறல் இல்லாதவாறும் இருப்பதற்கு, அரங்க அமைப்பும் மிக மிக இன்றியமையாத ஒன்றாகும். சில நிகழ்ச்சிகளில் மேடையில் அமைக்கப் பெற்றிருக்கும் மிகுஒளி விளக்குகள் சூடாகவும், கண்கள் கூசும்படியும் இருக்கும். சில நிகழ்ச்சிகளில் அமைக்கப் பெற்றிருக்கும் ஒலிபெருக்கிகள், ஒலியைப் பேசுபவர் பக்கமே சிதறடிக்கும். சில அரங்குகள் எதிரொலிப்பனவாக அமைந்திருக்கும். சில அரங்குகளில் அவையோர்களின் கவனம் நம்பக்கம் முழுவதும் படியாதபடி இடையிடைத் தூண்களோ, மறைவுகளோ, பலகணிகளின் வாயில்களின் உட்புறம் திறக்கப் பெற்ற கதவுகளோ மறைத்துக்கொண்டிருக்கும். சில அரங்குகளில் அவையோர் வரிசைகள் மிக எட்டமாக விருக்கும்; சிலவற்றில் மிகக் கிட்ட நெருங்கியிருக்கும்; அல்லது நாம் பேசுகின்ற மேடைக்கு மிகத் தாழ இருக்கும்; அல்லது சரிக்குச் சரி முகத்துக்கு முகம் இருக்குமாறு சம தளமாக விருக்கும். இன்னும் சில அரங்குகளில் கூரை மிக உயரமாக அமைந்து, பொழிவுகளின் ஒலியை உள்வாங்கிக் கொள்ளும் சிலவற்றின் கூரை கூடுபோல் அமைந்து 'உம்' என்ற ஓர் ஒலியைச் சிதர்க்கும். ஒலிபெருக்கிகளின் அமைப்பும் அப்படியே சரிவர அமையாமல் 'கரகர'வென்றும், 'டப்டிப்' என்றும், ஏறியிரங்கியும், இன்னும் பலவகை இணைப்புக் கோளாறுகளுடனும், ஒலிக் கூர்மையின்றியும் அமைந்திருக்கும். இத்தகைய இடையூறுகளால் பேசுபவரின் உணர்வு, கூர்மையாகவும், ஒருமுனைக் குவிப்பாகவும், கேட்பவர் கவனங்களை யெல்லாம் ஒரே முகமாக ஈர்க்குமாறு அறிவழுத்தம் கொண்டதாகவும் அமையாது. கேட்பவர்க்கும் நிறைவாக இருக்காது. இத்தகைய அமைப்புக் கோளாறுகள் எதுவுமின்றி, கொழும்புப் பம்பலப்பிட்டி, கதிரேசன் மண்டபம் அறிவியலும், பொறியியலும், கட்டடவியலும், கலையியலும் பொருந்திச் செவ்வை

www.thamizham.net - Free E book No 7503

யாக அமைக்கப் பெற்ற ஒரு கலையரங்கம். எனவே அங்கு ஆற்றிய உரையும் ஓர் உணர்வுப் பொழிவாக விருந்தது. அந்த உரை **'தினபதி'** என்னும் கொழும்பு (25-5-78) நாளிதழில் பெரிய தலைப்பு எழுத்துகளுடன் முதல் பக்கத்தில் பின்னர் வெளியாகியிருந்தது.

அன்றைய உரையில் தமிழ்மொழியின் வரலாறு, சிறப்பியல்கள், அதிலுள்ள வாழ்வியல், அறிவியல் கூறுகள், இலக்கிய மேன்மை, வரலாற்று வீழ்ச்சிகள் முதலியவற்றை நன்கு விளக்கினேன். நிகழ்ச்சித் தொடக்கத்தில் திரு. எசு. பி. பாண்டியன் வரவேற்புரை நிகழ்த்தினர். மன்றப் பொருளாளர் திரு. ம சு. சாம்பசிவம் முன்னுரை யாற்றினர். திரு. க நவசோதி, க. மு. தலைமையுரை செய்தார். அதன் பின்னர் என்னுரை இரண்டு மணி நேரம் நிகழ்ந்தது. 'தமிழ்நாடு தமிழர்களுக்குத் தாய்நிலமன்று; சேய் நிலமே. இலங்கைவாழ் தமிழ் மக்கள் சேய் நாட்டவர்கள் என்று சொல்லுதல் சரியன்று. இலங்கையை உள்ளடக்கிய ஒரு பெரும் நிலப்பகுதி இருந்தது அதுவே குமரி நாடு. அந்நாடு தென் கடலுள் மூழ்கு முன் தமிழும் தமிழரும் தோன்றியது அங்குதான். அதன் பின்னரே தமிழர் வடபகுதி நோக்கிச் சென்று, இந்தியா முழுவதும் பரவினர். ஆனல், காலப் போக்கில் நீண்ட காலத்திற்குப் பின் தமிழர் உலகின் நாலா பக்கங்களிலும் சென்று சிதர்ந்து வாழ வேண்டி வந்துவிட்டது. முந்திய காலத்தில் மிகச் சிறந்த வரலாறு படைத்த தமிழினம், இன்று சாதி, மத வேறுபாடுகளால் பல பிரிவுகளாகப் பிளவுபட்டு நிற்கிறது. இது மிகவும் வருந்துதற்குரியது. தமிழினத்துக்கு இன்று ஏற்பட்டுள்ள இரங்கத்தக்க நிலை இவ்வாறே நீடிக்கப் போவதில்லை. நீடிக்கும்படி விடவும் கூடாது. என்றேனும், ஒரு நாள் தமிழ் இனம் தனது பழம் பெருமையை மீட்டு, வேறு இன



மேடையில் திரு. ம. சு. சாம்பசிவம், திரு. க. நவசோதி, க. மு. திரு. எசு. பி. பாண்டியன் அமர்ந்துள்ளனர்.

www.thamizham.net - Free E book No 7503

மக்கள் முன் தலை நிமிர்ந்து வாழத்தான் போகிறது.' என்றும். "இங்கு இலங்கையில் உள்ள தமிழர்கள்தாம் தமிழைத் தூய்மையாக வும் மிகுந்த பிழையின்றியும் மிகுதியான கலப்பின்றியும் பேசுகின்ற னர். தமிழ்நாட்டில் தமிழர்கள் தமிழ்மொழியைப் பிற மொழி கலப் பாகவும், பிழையாகவும் பேசுகின்றனர். தமிழ்நாட்டில் உள்ள செய்தித்தாள்களும் தமிழைக் கொலை செய்கின்றன. தமிழ்மொழி யைத் தூய்மையாகப் பேச வேண்டும் என்று யாருக்கும் அக்கறை இருப்பதில்லை. இங்குள்ள தமிழர்களாவது தமிழ் மொழியைக் காத்து வருதல் வேண்டும். இங்குள்ள தமிழர்களாவது சாதி, மத வேறுபாடுகளின்றி அனைவரும் ஓரின உடன் பிறப்புகள் போல் ஒற்றுமையுடன் திகழ வேண்டும், என்றும் உணர்வும் அறிவும் மிக்க பல கருத்துகளை என் அன்றைய சொற்பொழி வில் கூறினேன். சொற்பொழிவு முடிவுற்றதும் அன்பர்கள் பலரும் என்னை வந்து சுற்றிச் சூழ்ந்து கொண்டனர். பல ஐயப்பாடான வினுக்களையும் தொடுத்தனர். அவற்றிற்கு அமைதி யாகவும் அவர்கள் நிறைவுறும்படியும் விடைகள் கூறி மகிழ் வித்தேன்.

அக்கால் அன்பர் ஒருவர் வியப்பான ஒரு செய்தியைச் சொன் னர். அங்குள்ள ஒரு கோயிலின் கல்வெட்டொன்றில் ஒரு வெண்பா காணப்பெறுகின்றதாம். அதன் சில சொற்கள் சிதைந்துள்ளன வாம். ஆனால் பாடலின் பொருள் நன்கு விளங்கும்படி உள்ளதாம். அதில், தமிழர் வாழ்ந்திருந்த முழு இலங்கை நாட்டையும் பல்வேறு இனத்தவர்கள் வந்து ஆள்வார்கள் என்றும், இறுதியில் சிங்கள வர்கள் ஆள்வார்கள் என்றும், அதன் பின் தமிழர்களே ஆளப் போகிறார்கள் என்றும், குறிப்புத் தோன்றும்படி மறைமுகமாக உரைக்கப் பெற்றிருப்பதாகத் தாம் ஐயுறுவதாகச் சொன்னார். அந்தப் பாட்டிற்கு அந்தப் பொருள் சரிதானா என்று நான் பார்த்துச் சொல்ல வேண்டுமென்று அவ்வன்பர் கேட்டார். அவர் யாரென்று எனக்குச் சரியாக நினைவில்லை. ஒருவேளை 'ராசமனோகரன்' என் னும் அன்பராக அவர் இருக்கலாம் என்று எண்ணுகின்றேன். உடனே, அவரிடம் அப்பாட்டைக் கூறும்படி கேட்டேன். அவர் பின் வரும் வெண்பாப் பாடலைச் சொன்னார்.

முன்னே குணக்கோட்டான் மூட்டும் திருப்பணியைப்
பின்னே பறங்கி பிடிப்பனே! . . . .
பூனைக்கண் செங்கன் புகைக்கண்ணன் போனபின்
தானே வடுகாய் விடும்.

— இந்தப் பாடல் என்ன பொருளைக் குறித்ததோ தெரியவில்லை ஆனால் அன்பர் கூறிய பொருளைக் கேட்டவுடன், அப்பொருளும் இதற்குப் பொருந்துவதாகப் பட்டது. அதிலுள்ள 'வடுகு' என்னும்

www.thamizham.net - Free E book No 7503

சொல் தமிழைக் குறிக்குமா' என்றும் அன்பர் கேட்டார். நான், 'வடுகு என்பது வடக்கே உள்ள மொழி என்பதாகப் பொருள்பெற்று, இலங்கைக்கு வடக்கே வழங்கும் தமிழ் மொழியைக் குறிக்கலாம்' என்று கூறினேன், பின்னர் அவர் நிறைவுற்றுப் போனார். கூட்டத்திற்கு உலகத் தமிழ்ப் பண்பாட்டுக் கழக அமைப்பாளர் திரு. குரும்பு சிட்டி கனகரத்தினம் என்பவரும் வந்திருந்தார். அவர் தம் ஊருக்கு நான் வரவேண்டும் என்றும், இரண்டு மூன்று நாள் தம்மொடு தங்க வேண்டும் என்றும், அக்கால் உலகத் தமிழர் முன்னேற்றம் குறித்துப் பலவும் 'கதைக்கலாம்' என்றும் கேட்டுக்கொண்டார். ('பேசலாம்' என்பதற்கு இலங்கைத் தமிழரின் பெருவழக்கு 'கதைக்கலாம்' என்பது.) நான் அன்று மறுநாளுடன் இலங்கையில் தங்குவதற்காக இலங்கை அரசு கொடுத்திருந்த இசைவு (Visa) முடிவுறுவதாகவும், மறுநாள் அதை மேலும் ஏழு நாட்கள் புதுப்பிப்பதற்கான முயற்சியைக் கொழும்பில் செய்ய வேண்டும் என்றும், அதன்பின் யாழ்ப்பாணத்தில் திரு. கா பொ. இரத்தினம் சில நிகழ்ச்சிகளைத் தொடர்ச்சியாக அமைத்திருப்பதாகவும், எனவே வேறு எங்கும் எதிலும் கவனம் செலுத்த முடியாமலிருப்பதற்கு வருந்துவதாகவும் கூறி, அவரை அமைவு செய்தேன். ஆனால் திரு. கனகரத்தினம் என் இயலாமை விடைக்காக என்மேல் வருத்தப்பட்டார் சிணுங்கவும் செய்தார். நான் என்னவும் செய்ய வியலாமலிருப்பதாகவும் கூறி அவரிடமிருந்தும், பிற அன்பர்களிடமிருந்தும் விடை பெற்றேன்.

திரு. குரும்புசிட்டி கனகரத்தினம் மிகவும் ஆர்வமான தமிழ் அன்பர். உலகிலுள்ள தமிழினத்தின் ஒற்றுமை நோக்கி அன்றாடம் உழைப்பவர். தாம் ஓர் அரசுப் பணியாளராக விருந்தும், அவர் பணி நேரம் போக மிகுதி நேரம் முழுவதும் தமிழின நலனுக்காகவே செலவிடுபவர். 'உலகத் தமிழர் குரல்' என்றொரு சிறிய இதழைத் தம் சொந்த செலவில் அச்சிட்டு, உலக முழுதுமுள்ள தமிழினத் தொடர்பாளர்களுக்கு அனுப்பி ஒற்றுமை உணர்வைப் பரப்பி வருபவர். 1977-இல் சென்னையில் இவரும், மலேசியாவில் உள்ள உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கத் தலைவர் திரு. இரா. ந. வீரப்பன் அவர்களும், பெரிதும் முயன்று அவ்வியக்கத்தின் மாநாட்டைச் சிறப்புடன் நடத்தியுள்ளார். அக்கால் தென்மொழிக்கும் பல முறை வந்து, என்பால் பலவற்றைப் பற்றியும் கலந்து பேசியுள்ளார். இறுதியில் சென்னை, பெரியார் திடலில் நடந்த பண்பாட்டு இயக்கத்தினரின் வழியனுப்புக் கூட்டத்தில் இருவரும் நானும் கூட கலந்து கொண்டிருந்தோம். ஆகையால் மிக்க உரிமையுடனும் ஆர்வத்துடனும் என்னைக் கனகரத்தினம் அழைத்தார். ஆனால், என் செய்வது? என்னால் அவர் விருப்பப்படி நடக்கவியலாதவாறு சூழல் அமைந்து விட்டது. அதுவுமன்றி மறுநாள் வேறு, திருவாளர்கள் சந்திரகோனும், நவசோதியும் கொழும்புவிலுள்ள மலைப்

www.thamizham.net - Free E book No 7503

பகுதிகள் சிலவற்றிற்கு என்னை அழைத்துச் செல்லவும், அங்குள்ள தமிழ்த் தோட்டத் தொழிலாளர்கள் சிலரைக் காணவும் அவர்களுடன் பேசவும், நான் விருப்பம் தெரிவித்ததன் அடிப்படையில், திட்டமிட்டுச் சில ஏற்பாடுகளைச் செய்திருந்தனர். எனவே கனகரத்தினத்தின் வேண்டுகோளை என்னால் நிறைவேற்ற முடியாமல் போயிற்று.

அன்று இரவு இருப்பிடம் திரும்பிய பின் அன்பர்கள் அன்றைய என் பேச்சைப் பற்றியே நிறைவாகவும் பெருமையாகவும் பேசிக் கொண்டிருந்தனர். இரவு 12-30 மணியளவில் இடியாப்பம் படைக்கப்பெற்றது. திரு சந்திரசேகரன் அவர்களும், திரு. பாண்டியன் அவர்களும் மிகச் சிறப்பாக உணவை ஏற்பாடு செய்திருந்தனர். திரு. சந்திரசேகரனின் அன்பு விருந்தோம்பல் உணவில் தெரிந்தது. உணவுக்குப் பின், மறுநாள் காலை விரைவில் மலைப் பகுதிகளுக்குப் புறப்படவேண்டும் என்ற நினைவூட்டுதலுடன் அனைவரும் உறங்கச் சென்றோம். மணி இரவு 2 ஆகி யிருந்தது. (தொடரும்)

தனித்தமிழியக்க வரலாறு

ஓர் அறிக்கை

ஆசிரியர் **பெருஞ்சித்திரனாரால்** **'தனித்தமிழ் இயக்க வரலாறு'** என்றொரு விரிவான நூல் எழுதப் பெற்று வருகிறது. அதில் குறிக்கப் பெறவேண்டிய செய்திகள், அன்பர் முயற்சிகள், நூல் முயற்சிகள், இயக்க முயற்சிகள்பற்றி, ஆங்காங்குள்ள அன்பர்களும் ஆசிரியர்களும் தென்மொழிக்கு விளக்கமாக விரைந்தெழுதி விடுக்கக் கேட்டுக் கொள்கிறோம். அது தொடர்பான நூல்கள் இருப்பினும் அவற்றை அனுப்பி வைத்தால் பயன்படுத்திக் கொண்டு திருப்பியனுப்பி விடலாம். நூல்களை அன்பளிப்பாகவும் விடுக்கலாம் தனித்தமிழ் இயக்க வளர்ச்சியில் ஈடுபட்ட அல்லது ஈடுபட்டு வரும் அறிஞர்கள் படங்களையும் அனுப்பலாம். எவ்வாறேனும் நூல் சிறப்புற, முழுமையாக அமையவேண்டும் என்று விரும்பப் பெறுவதால் அறிஞர்களும் அன்பர்களும் இவ்வகையில் பெரிதும் ஒத்துழைக்கும்படி கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள்.

அமைச்சர்
தென்மொழி.

'தென்மொழி' சென்னை-5

	உள்நாடு	கொழும்பு	வெளிநாடு
ஆண்டுக் கட்டணம்:	15 உருபா	35 உருபா	35 உருபா
அரையாண்டுக் கட்டணம்:	8 ,,	18 ,,	18 ,,
தனியிதழ்:	1.25 ,,	3 ,,	3 ,,

ஓரிதழுக்கு உருபா 2.50 மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர்கள் எழுதிக் கேட்க.

www.thamizham.net - Free E book No 7503

'தென்மொழி' வளர்ச்சியில் ஆர்வம் காட்டும் அன்பர்கள் கவனிக்க'!

'தென்மொழி' வளர்ச்சி நலனுக்காக, 'அன்பர் குழு' ஒன்று அமைத்தல் பற்றிய அறிக்கை

அன்புடைத் தமிழீர்! 'தென்மொழி'யின் கொள்கைகளையும், குறிக்கோள்களையும் நன்கறிந்தும், அதன் வினைபடு வகைகளையும், எய்தவிருக்கும் நோக்குகளையும் இலக்குகளையும் ஓரளவு கண்டுணர்ந்தும், உய்த்தறிந்தும், தெரிந்துள்ள நிலையில், அவற்றிற்காக, 'தென்மொழி'யின் வளர்ச்சி நலனில் அக்கறையும் ஆர்வமும் கொண்டு, பாடுபடும் எண்ணமுடைய நல்லன்பர்களை ஒன்றுகூட்டிப் பயனுற இயங்க வைக்கும் நோக்கத்துடன், சென்னை மாநகரத்தையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் சேர்ந்த அன்பர்கள் பலரும் அமைந்த 'தென்மொழி அன்பர் குழு' ஒன்றை அமைக்கத் திட்டமிட்டுள்ளோம். அக் குழுவின் பணிநிலைகள் கீழ்வருமாறு வகுக்கப் பெறும்.

(1) 'தென்மொழி'—'தமிழ்ச்சிட்டு' இதழ்களை அன்பர்கள் தந்தம் பொறுப்பில் வாங்கி விற்பனை செய்தல்; அதன் மூலம் மொத்த விற்பனையைக் கணிசமாக அதிகரிக்கச் செய்தல்.

(2) 'தென்மொழி'—'தமிழ்ச்சிட்டு' இதழ்கட்கு ஆண்டொப்பங்களை முயன்று சேர்த்து உதவுதல். அதன் மூலம் உறுப்பினர் தொகையைக் கூடச் செய்தல்.

(3) 'தென்மொழி'யின் பிற நூல்களையும் வெளியீடுகளையும், தென்மொழி இயக்கஞ் சார்ந்த சார்பு மன்றங்கள்—அமைப்புகளின் வெளியீடுகளையும் வாங்கி விற்பனை செய்து தருதல்.

(4) 'தென்மொழி'க் கொள்கைகளும் கருத்துகளும் மக்களிடையே பரவும்படி உழைத்தல்.

இத் 'தென்மொழி அன்பர் குழு'வின் அமைப்புக் கூட்டம் கீழ்க் காணுமாறு நடைபெறும்.

இடம் : 'பஃறுளி முன்றில்' : 23, கோயில் குறுஞ்சாலை, திருநகர் குடியிருப்பு, சைதை, சென்னை-15.

பக்கல் : தி. பி. உ0கக, துலாம் (ந) 3 (19-10-80), ஞாயிற்றுக் கிழமை.

நேரம் : காலை 9 மணிக்குத் தொடக்கம்.

சென்னை நகரத்தையும் அதன் சுற்றுவட்டாரத்தையும் சார்ந்த தென்மொழி அன்பர்கள் யாவரும் தவறாது வந்து கூட்டத்தில் கலந்து கொண்டு கருத்தறிவிக்க வேண்டுகிறோம்.

இப்படிக்கு, வணக்கத்துடன்,
தென்மொழி மறை. நித்தலின்பன்,
தென்மொழி ப .முருகவேள்,
தென்மொழி சோ. ஆற்றலரசு,
முன்வினைஞர்கள்.

சென்னை
1-10-1980

www.thamizham.net - Free E book No 7503

தொடர்-4

பாரதிதாசன் பாடல் தொகுதியில் பாட வேறுபாடு

—பர். ச. சு. இளங்கோ, க. மு.

பாவேந்தர் தேசிய இயக்கத்தில் தீவிரக் கொள்கையினராக இருந்தபோது 1920-இல் நடந்த மெய்யுறுதி (சத்தியாகிரக)ப் போராட்டத்தில் கலந்து கொண்டு சிறையும் சென்றவர்.[5] 'தொண்டர் படைப் பாட்டு', 'சிறுவர் சிறுமியர் தேசிய கீதம்', 'கதர் இராட்டினப் பாட்டு' முதலிய நூற்களை எழுதி நாட்டு மக்கள் உள்ளத்தில் உரிமை (சுதந்திர)க் கனலை மூட்டினார். பாரதியாரின் பிரிவுக்குப் பின்னர், திராவிட இயக்கத்தில் சேர்ந்து தொண்டாற்றினார். பாடல்கள் பல எழுதினார். அப் பாடல்கள் பின்னர் நூல் வடிவம் பெற்றன. அப்படி அமையப் பெற்ற நூலினுள் ஒன்று தொகுதி II. தேசிய இயக்கத்தின் தாக்கத்திலிருந்து தொடக்க காலத்தில் அவரால் விடுபட இயலவில்லை என்பதை இப் பாடல் பகுதி காட்டுகிறது.

இது போன்ற தேசிய உணர்வுள்ள பாடலடிகளைப் பாவேந்தர் பல விடங்களில் இந் நூலில் மாற்றியுள்ளார். எடுத்துக்காட்டாக 'அறிவியக்கப் புலமை கண்ட பாரத தேசமே' (மு. ப. பக்-71) என்பதை 'அறிவியக்கப் புலமை கண்ட என் அன்னை நாடே' (இ. ப. பக்-105) என்றும், 'திவ்ய பாரத தேசமே' (மு. ப. பக்-72) என்பதைத் 'திருவார்ந்த என்றன் நாடே' (இ. ப. பக்-106) என்றும், 'அறிவியக்கங் கண்டுணர்ந்த பாரத தேசமே' (மு. ப. பக்-73) என்பதை, 'அறிவியக்கங் கண்டுணர்ந்த என் அன்னை நாடே' (இ. ப. பக்-107) என்றும், தூய பாரத தேசமே' (மு. ப. பக்-74) என்பதைத் 'தூய என் அன்னை நாடே' (இ. ப. பக்-108) என்றும், 'அழகு பாரத தேசமே' (மு. ப. பக்-75) என்பதை, 'அழகு செந்தமிழ் வையமே' (இ. ப பக்-109) என்றும், 'பெரிய பாரத தேசமே' (மு. ப. பக்-76) என்பதைப் 'பெரிய என் அன்னை நாடே' (இ. ப. பக்-110) என்றும், 'அறிவியக்கங் கண்ட அழகு பாரத தேசமே' (மு. ப. பக்-78) என்பதை, 'அழகுசேர் அன்னை நாடே' (இ. ப. பக்-111) என்றும், 'தகை கொள் பாரத தேசமே' (மு. ப. பக்-79) என்பதை, 'தகை கொண்ட அன்னை நிலமே' (இ. ப. பக்-112) என்றும், 'தூய பாரத தேசமே' (மு. ப. பக்-80) என்பதைத் 'தூய என் அன்னை நிலமே' (இ. ப. பக்-113) என்றும் மாற்றியுள்ளார்.

நாட்டுப் பிரிவினையை வற்புறுத்திய திராவிட இயக்கத்தில் பங்கேற்றுப் பாவேந்தர் தொண்டாற்றியதால், இவ்வாறு மாற்றினார் எனலாம்.

---

5. ஏ. கெ. செட்டியார், புரட்சிக் கவிஞர், 'புரட்சிக் கவிஞர் பாரதிதாசன், மூன்றும் பதிப்பு (சென்னை, 1953) பக்-70.

www.thamizham.net - Free E book No 7503

11) ‘தமிழர்க்குத் **தொண்டு செயும்**’ தமிழனுக்குத்
தடைசெய்யும் நெடுங்குன்றும் தூளாய் போகும்’
(மு. ப. பக்-29) என்பதில் தொண்டு செயும் என்பதை ‘தொண்டு செய்யும்’ எனத் திருத்தியுள்ளார். (இ. ப. பக்-81).

12) ‘அழகிய நாட்டில் அந்நாள் இலாத
சாதியும் மதமும் தடைசெய்யும் வலிவிலே
மோதுதோள் அனைத்தும் மொய்த்தன ஒன்றாய்!’
(மு. ப. பக்-36) என்பதில் ‘இலாத’ என்பதை இல்லாத (இ. ப. பக்-101) எனத் திருத்தியுள்ளார். ‘இலாத’ என்பதினினும் ‘இல்லாத’ என்பதில் ஓசை நயம் சிறப்பதால் அவ்வாறு திருத்தினார் எனலாம்.

13) ‘மக்கள் கணக்கும் **வழங்கு** மொழியும்
மிக்குள பண்பையும் விளங்குகின்ற
கற்பனைத் திறத்தைக் காணுவீர்’ (மு. ப. பக்-41) என்பதில் ‘வழங்கு’ என்பதை ‘வழங்கும்’ (இ. ப. பக்-57) எனத் திருத்தியுள்ளார்.

‘வழங்கு மொழியும்’ என்பதனினும் ‘வழங்கும் மொழியும்’ என்பதில் பொருள் எளிமை அமைந்துள்ளதால் அவ்வாறு திருத்தினார் எனலாம்.

14) ‘முன்னாள் அனுப்பிய கட்டுரையும் பாட்டும்
சரியாய்ப் பதிந்ததுண்டா இல்லையா என்று
வரிமேல் விரல்வைத்து வாசிப்பார் ஏட்டை’ (மு. ப. பக்-44) என்பதில் ‘பதிந்ததுண்டா’ என்பதை ‘படிந்த துண்டா’ (இ. ப. பக்-60) எனத் திருத்தியுள்ளார்.

‘பதிந்ததுண்டா’ என்பதில் மனத்தில் பதிதல் எனும் பொருள் கொள இடம் இருப்பதால் ‘பொருள் மயக்கத்தைத் தவிர்க்க வேண்டி’ ‘படிந்ததுண்டா’ என்று திருத்தினார்.

15) ‘மொழிந்திடு சன்னத்த உள்ளம் கவிதையுள்ளம்
பூண்டிருந்த பாரதியாராலே . . .’ (மு. ப. பக்-49) என்பதில் ‘சன்னத்த உள்ளம்’ என்பதைச் ‘செவ்விய உள்ளம்’ (இ.ப. பக்-65) எனத் திருத்தியுள்ளார்.

‘சன்னத்த’ என்பது பிறமொழிச் சொல்லாதலின் ‘செவ்விய உள்ளம் என்று திருத்தியுள்ளார்.

16) ‘உலக கவி அல்ல அவர் எனத் தொடங்கி
ஐயர் கவிதைக் கிழுக்கும் கற்பிக்கின்றார்
அழகாக முடிச்சவிழ்த்தால் விடுவார் **உண்டா?**’ (மு. ப,

www.thamizham.net - Free E book No 7503

பக்-51) என்பதில் 'உண்டா' என்பதை 'உண்டோ?' (இ. ப. பக்-67) எனத் திருத்தியுள்ளார்.

'உண்டா' என்பதனினும், 'உண்டோ' என்பதில் பொருள் அழுத்தம் கொண்டு விளங்குவதால் அவ்வாறு திருத்தினுர் என்க.

17) 'திராவிடம் ஆகும் அண்ணே—வேறி
ராதெனல் உண்மை அண்ணே' (மு. ப. பக்-67) என்பதில் 'வேறிராதெனல்' என்பதை 'வேறிஇ ராதெனல்' என்றும் (இ. ப. பக்-77), வேறி இராதெனல் (மு. ப. பக்-103) என்றும் திருத்தியுள்ளார்.

'வேறிராதெனல்' என்பதனினும் 'வேறிஇராதெனல்' என்பதில் பொருத்தமுள மோனை அமைந்துள்ளதால் அவ்வாறு திருத்தினுர் எனலாம்.

18) 'மனைமக்கள் தூங்கிஞர் நள்ளிரவில் விடை பெற்று வழி நடைச் **சிரமம்** இன்றி' (மு. ப. பக்-105) என்பதில் 'சிரமம்' என்பதைத் 'தொல்லை' (இ. ப. பக்-105) எனத் திருத்தியுள்ளார்.

'சிரமம்' என்பது பிறமொழிச் சொல்லாதலின் அதனைத் தொல்லை எனத் திருத்தினுர் எனலாம்.

19) 'வழிபறிக் கும் சிரமம் இன்றியே பொதுமக்கள்
மதிப்பைப் பறித்தெறிந்து (மு. ப. பக்-75) என்பதில் 'சிரமம்' என்பதைத் 'தொல்லை' (இ. ப. பக்-109) எனத் திருத்தியுள்ளார்.

இதற்கு முன்னர்க் கொடுக்கப்பட்ட காரணமே இத் திருத்தத்திற்கும் பொருந்தும்.

20) 'தாய்வந்து தாவும் **தளிர்க்கரம்** தீதென்று
விள்ளுவதோ? .....' (மு. ப. பக்-82) என்பதில் 'தளிர்க்கரம்' என்பதைத் 'தளிர்க்கையை' (இ. ப. பக்-115) எனத் திருத்தியுள்ளார்.

'கரம்' என்பது பிறமொழிச் சொல்லாதலின் 'கை' எனத் திருத்தினுர்.

21) '.......... நோக்கி
யேகிடுதே இந்த வைய இலக்ஷியம்' (மு. ப. பக்-82) என்பதில் 'வைய இலக்ஷியம்' என்பதை 'வைய இலக்கியம்' (இ. ப. பக்-116) எனத் திருத்தியுள்ளார்.

முதற் பதிப்பில் இடம் பெற்றுள்ள வடசொற்களைக் களைய

www.thamizham.net - Free E book No 7503

வேண்டும் என்ற முனைப்பில் 'வைய இலக்ஷியம்' என்பதை 'வைய இலக்கியம்' எனத் திருத்தினார்.

'வைய இலக்ஷியம் என்பதை 'வைய இலக்கியம்' எனத் தமிழ்ப் படுத்தி எழுதுவதினும் 'வைய இலக்கியம்' என்பது விழுமிய சொல் என்பதால் அவ்வாறு திருத்தினார் எனலாம்.

22) 'அருமை மகனுக்கு—ஒருத்தி சேர்த்தல் போல்
பெருங்கடல் அளக்கும் பெரும் போர்க் கப்பல்
குண்டுகள் கொடிய் வண்டிகள் சார்புகை
வண்டெனப் பறக்கும் வான ஊர்திகள்
அனைய அனைத்தும் அடுக்கடுக் காக
மறைவினில் சேர்த்து வைத்த இட்லர்' (மு. ப. பக்-85)

என்பதில் 'ஒருத்தி' என்பதை 'ஒருதாய்' (இ. ப. பக்-119) எனத் திருத்தியுள்ளார்.

'ஒருத்தி' என்பது தாயை மட்டும் குறிக்காமல் பொருள் மயக்கத்தை விளைவிக்குமாதலால் பொருள் தெளிவு கருதி 'ஒருத்தி' என்பதை 'ஒருதாய்' எனத் திருத்தினார்.

23) உடலில் வைத்த உயிரினால் காக்கும்
உருசியை இட்லர் உணர்ந்தா னில்லை' (மு. ப. பக்-86)

என்பதில் 'உருசியை' என்பதை 'உருசியத்தை' எனவும் 'உணர்ந்தா னில்லை' என்பதை 'உணர்கிலான்' எனவும் திருத்தியுள்ளார். (இ. ப. பக்-120)

'உருசியை' என்பது தெளிவாக சோவியத் ஒன்றியத்தைக் குறிக்காமைக் கருதி 'உருசியத்தை' எனத் திருத்தினார். 'உருசியை' என்னும் ஓர் இயற்சீரை 'உருசியத்தை' எனத் திருத்துமிடத்து இரண்டு இயற்சீர் ஆகின்றது. இவ்வொருசீர் மிகுதியை ஈடுகட்டுவதற்காக 'உணர்ந்தானில்லை' எனும் இயற்சீர் இரண்டை 'உணர் இலான்' என ஓர் இயற்சீராகக் குறைத்துத் திருத்தினார்.

மிகவும் கவனமாக எழுதுகின்ற இலக்கியத் திறலார்கள் கூட, சில சமயங்களில்தாம் எழுதும் தொடர் நிறைவு தராததால், திருத்தி விடுகின்றனர். பாரதிதாசன் திருத்தங்களும் இக் காரணத்தால் நிகழ்ந்தனவே.

என்றிவ்வாறு நிகழ்ந்த திருத்தங்களுக்கு மொழித் தூய்மை, இலக்கணச் செம்மை, கருத்து வளர்ச்சி, பொருள் தெளிவு ஆகியவை காரணங்களாகும். (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7503

தமிழப் பேரரசு

—சி. பா. ஆதித்தனர்.

ஆனால், இதற்குப் பணம் இல்லை என்று கைவிரித்து விட்டது தில்லி அரசு!

தமிழ்நாட்டில் தில்லி அரசு கடந்த 11[1] ஆண்டுகளாகச் சுரண்டிச் சென்ற தொகை உரு. 800 கோடி! இதில் 50-இல் ஒரு பங்கை விடக் குறைவான உரு. 15 கோடி செலவு செய்தாலும் 'தமிழன் கால்வாய்' தோண்டிவிடலாம். ஆனால் அதைச் செய்யாமல் தமிழ்நாட்டைக் குடியேற்ற ('காலனி') நாடாக, அஃதாவது சுரண்டப்படுகிற நாடாகக் கருதுகிற தில்லி அரசு அந்தத் திட்டத்தைக் கைவிட்டு விட்டது!

அடிமைத்தளை நீங்கினால் . . .

தமிழ்நாட்டின் அடிமைத்தளை நீங்கி, உண்மையான 'தமிழர் ஆட்சி' தமிழ்நாட்டில் ஏற்படுமானால், 'தமிழன் கால்வாய்' உடனடியாக நிறைவேற்றப்பட்டு, அங்குத் 'தமிழ்க் கொடி' பறக்கும் என்பதில் ஐயம் இல்லை! அந் நாள், எந்நாளோ!

9. தேசியக் கொள்கையரின் பொய்யுரை!

தில்லியின் வல்லாண்மையில் தமிழ்நாடு அடிமைப்பட்டுக் கிடக்கவேண்டும் என்ற எண்ணத்துடன் 'தேசியக் கொள்கையர்', 'நாம்-தமிழர்' இயக்கத்துக்கு மறுப்பாகக் கீழ்க்காணும் தருக்கங்களை எழுப்பி யிருக்கிறார்கள் :—

(1) 'தமிழ்நாடு' ஒரு சிறிய நாடு, முழுவுரிமையுடன் வாழ முடியுமா?' இந்தத் தருக்கத்துக்கு இந்நூலில் விடை சொல்லியாகி விட்டது.

காவிரிக்கு ஏதமா?

(2) 'உரிமைத் தமிழ்நாட்டுக்கு ஒப்புதல்தான். ஆனால், காவிரி ஆற்றுக்கு என்ன செய்வது?'

உண்மையில் தன்னுரிமை வேண்டும் என்று விரும்புகிறவர்களுக்கு, எந்த ஆறும் குறுக்கே நிற்காது!

காவிரி ஆற்றின் ஒரு கிளை, கன்னடர் நாடு வழியாக (அஃதாவது மைசூர் மாநிலத்தின் வழியாக) ஓடி வருகிறது என்பது எல்லோருக்கும் தெரியும். காவிரி ஆற்றுத் தண்ணீர் முழுவதும் மைசூரில் இருந்து வருகிறது என்று சிலர் சொல்லுவது மிகைப் படுத்திக் கூறுவது ஆகும்.

---

1. நூலின் 4-ஆம் பதிப்பு வெளிவந்த ஆண்டு 1958.

www.thamizham.net - Free E book No 7503

ஆற்றுத் தண்ணீரில் ஒரு பகுதி, மைசூர் வழியாக, தமிழ்நாட்டுக்குள் வருகிறது! ஆனால், 'இதைக் காட்டித் தமிழ்நாடு தனியாக இயங்க முடியாது என்று சொல்லுவது, நிலநூல் படிக்காதவர்களை ஏமாற்றும் தந்திரமே யொழிய, நயன்மையான காரணம் ஆகாது.

அஃது உண்மையான காரணமாக இருக்குமானால், சீனாவும், பாகித்தானும், இந்தியாவும் தனித்தனி நாடுகளாக இயங்க முடியாது! ஏன் என்றால், 'பிரமபுத்திரா' என்ற ஆறு, சீன வழியாக 800-கல் ஓடி, அதன் பிறகு இந்தியா வழியாக 800-கல் ஓடி, பின்னர் பாகித்தானில் ஓடுகிறது.

மேற்படி ஆற்றைச் சுட்டிக்காட்டி, அதன் காரணமாக, இந்தியாவும், சீனாவும் தனித்தனி நாடுகளாக இருக்கக் கூடாது என்று சொல்வோர் யாரும் இல்லை. இந்தியாவும், பாகித்தானும் ஒன்றாக இணைந்து விடவேண்டும் என்று சொல்லுகிறவர்களையும் காணோம்!

இதைப் போலவே, ஐரோப்பாவில் ஒரு ஆறு; (டானியூப் என்ற பெயர் உடையது) 6 நாடுகளைத் தொடுகிறது!

இருந்தாலும் அந்த நாடுகள் எதுவும் தனியாக, சொந்தக் கொடியுடன் இருக்கக்கூடாது என்று சொல்லுகிறவர்கள் யாரும் இல்லை.

பொதுவாகப் பார்த்தால் உலகத்தில் உள்ள பெரிய ஆறுகள் எல்லாம், பல நாடுகளின் பொது உடைமையாகவே இருக்கின்றன என்பதைக் காணுகிறோம். இந்த ஆறுகளின் காரணமாக சண்டை சச்சரவு ஏற்படுவதில்லை.

ஏனென்றால், ஓர் ஆற்றின் தண்ணீரைப், பல நாடுகள் பகிர்ந்து கொள்வதற்கு, நெறிமுறைகள் இருக்கின்றன. அந்தக் கட்டுப்பாடுகளின்படி அந்த நாடுகள் நடந்து கொள்கின்றன.

எந்த நாடாவது, நெறிமுறைகளை மீறினால், அதனால் ஏற்படுகிற சிக்கலை ஒன்றிய நாடுகள் அவையிலும், உலக நாடுகளின் நய மன்றத்திலும் தீர்த்துக் கொள்ளலாம்.

வீண் புரளி

ஆகவே, தமிழ்நாடு தனி நாடாக இயங்கினால், காவிரி ஆற்றுத் தண்ணீரை இழந்து விடுவோம் என்பது வீண் புரளி. ஒரு சொட்டுத் தண்ணீரையும் இழக்க மாட்டோம்.

மேலும், 'ஆறு' என்பது மட்டும்தான் ஒரு நாட்டின் வளத்தை உறுதிப்படுத்துவது அன்று என்பதை ஏற்கனவே சுட்டிக்காட்டியிருக்கிறோம்.

www.thamizham.net - Free E book No 7503

புதுமையான தருக்கம்!

(3) 'இராமேசுவரம் போன்ற திருத்தலங்கள் தமிழ்நாட்டிலும், காசி போன்ற திருத்தலங்கள் வடநாட்டிலும் இருக்கின்றன. ஆகவே வடநாடும் தமிழ்நாடும் ஒன்றாக இருக்க வேண்டும்' என்பது தேசியக் கொள்கையர் சொல்லுகிற மூன்றாவது காரணம்.*

இந்தக் காரணம் புதுவகையாக இருக்கிறது. இந்தத் தருக்கத்தின்படி. பார்த்தால், இந்தியாவில் உள்ள முசுலிம்கள் 'மெக்கா'வுக்குப் போகிறார்களே, அவர்கள் ஒரு நாட்டை விட்டு மற்றொரு நாட்டுக்குத்தானே வழிநடை (யாத்திரை) போகிறார்கள்! வழிநடை போகிற இடம் ஒரு நாட்டுக்குள்தான் இருக்கவேண்டும் என்றால், இந்தியாவும், மெக்காவும் ஒரே நாடாக வேண்டும் என்று ஆகிறதே!

இதேபோல், செர்மனி தேசத்தில் உள்ள கத்தோலிக்கர்கள், இத்தாலியில் உள்ள ரோம் நகரத்துக்கு வழிநடை போகிறார்கள். இதற்காக அந்த 2 நாடுகளையும் இணைக்கவேண்டும் என்று சொல்லுகிறவர்கள் இல்லை! இரண்டு நாட்டுக்காரர்களும் தனித்தனி மொழி பேசுகிறவர்கள். அந்த அடிப்படையில் அவை இரண்டும் தனி நாடுகளாகவே இருக்கின்றன.

அதேபோல, இந்திக்காரர்கள் தில்லியில் 'கங்கை நாடு' அடைந்து வாழட்டும். தமிழர்கள் 'தமிழ்நாடு' அடைந்து வாழட்டும். இங்குள்ள திருத்தல ஊர்களுக்குக் கங்கை நாட்டவர் வந்து போகட்டும். அதுபோல், தமிழ்நாட்டில் உள்ளவர்களும் காசிக்கு வழிநடை போய்விட்டுத் திரும்பலாம்!

ஆகவே, 'திருத்தலங்கள்' என்ற காரணத்தைச் சுட்டிக்காட்டி, தமிழ்நாடு தனி நாடாக இயங்க முடியாது என்று கூறுவது அறிவுடைமை அன்று!

யாழ்ப்பாணத் தமிழர்கள்

(4) 'இலங்கையில் ஒரு பகுதியாக இப்போது இருக்கிற யாழ்ப்பாணம், தமிழ்நாட்டுடன் சேரவேண்டும் என்பது தப்பு'—இது தேசியக் கொள்கையர் சொல்லுகிற அடுத்த காரணம்.

யாழ்ப்பாணத்தில் வாழ்பவர்கள் யார்? அவர்களும் தமிழர்கள் தாமே? அவர்களும் தமிழ் இனத்தவர்கள்தாமே? 'ஒரு மொழி — ஒரு நாடு' என்ற முறையிலேயே உலகெங்கிலும் உள்ள நாடுகள் அமைந்

o 1958 பிப்ரவரி 11-ஆம் பக்கல் 'இந்து' செய்தித்தாள் மேற்படி காரணத்தைச் சொல்லி, 'நாம்-தமிழர்' இயக்கத்தைக் கண்டித்துத் 'தீயுடன் விளையாட்டு' என்ற தலைப்பில் ஆசிரியவுரை எழுதியது.

www.thamizham.net - Free E book No 7503

திருக்கின்றன. ஒரே மொழி பேசுகிற மக்கள் துண்டாக—2 நாடுகளாக—பிரிந்து கிடந்தால் அந்தப் பிரிவினை நீடித்து நிற்பதற்கில்லை என்பதை அண்மையில் அரபு நாடுகளில் நடைபெற்ற நிகழ்ச்சிகள் காட்டுகின்றன என்பதை ஏற்கனவே எடுத்துக் காட்டியிருக்கிறோம். அஃதாவது 'இராக்' என்ற அரபு நாடும், 'சோர்டான்' என்ற அரபு நாடும் ஒரே நாடாகச் சேர்ந்து விட்டன. எகிப்து—சிரியா ஆகிய 2 அரபு நாடுகளும் 'ஒரே மொழி—ஒரு நாடு' என்ற அடிப்படையில் ஒன்று சேர்ந்துவிட்டன. அப்படி இருக்கும்போது, தமிழகத்தில் வாழுகின்ற 400 இலக்கம் தமிழர்களும் இலங்கையில் வாழுகின்ற 25 இலக்கம் தமிழர்களும் ஏன் ஒன்று சேரக்கூடாது? இதில் என்ன தவறு?

(5) இந்தியா தேசத்தைத் துண்டு போட்டுத், தமிழ்நாடு தனி நாடாக ஆவது 'இரண்டகம்' என்பது தேசியக் கொள்கையர் சொல்லுகிற மற்றொரு காரணம்.

தில்லியில் அடிமை ஆட்சியில் இருந்து விடுபட்டு, தமிழ் நாட்டை 'உரிமை நாடு' ஆக ஏற்படுத்த வேண்டும் என்பது இரண்டகமா, வீரமா என்பதற்கு முன்பே இப் பொத்தகத்தில் விடை சொல்லியாகிவிட்டது.

10. சிறுபான்மைத் தன்மை

இலங்கையில் தமிழ் மக்கள் துன்பப்படுகிறார்கள் என்றால், அதற்கு அடிப்படையான காரணம் என்ன? தமிழர்கள் அங்கே 'சிறுபான்மையர்' என்ற நிலையில் இருப்பதுதான்

இலங்கையில் 65 இலக்கம் சிங்களர்களும், 25 இலக்கம் தமிழர்களும் வாழுகிறார்கள். சிங்களருக்குப் 'பெரும்பான்மையர்' என்ற நிலையும், தமிழர்களுக்குச் 'சிறுபான்மையர்' என்ற நிலையும் இருக்கின்றன.

1958 ஏப்ரல், மே மாதங்களில், தமிழர்கள் இலங்கையில் சிங்கள வெறியர்களின் கொலை, கொள்ளை, தீவைத்தல், சூறையாடுதல் முதலிய கொடுமைகளுக்கு ஆளாகி இருக்கிறார்கள். '1000 தமிழர்கள் கொல்லப்பட்டார்கள். தமிழர்களுக்குச் சொந்தமான வீடுகள், பொருட்கள் சுமார் ஒரு கோடி உருபாவுக்கு மேல் சேதம் ஆக்கப்பட்டன. பஞ்சாப் படுகொலையை விட பத்து மடங்கு அஞ்சத்தக்கது. இந்த இலங்கைப் படுகொலை' என்று நேரில் பார்த்தவர்கள் கூறுகிறார்கள்.

'சிங்களம் படித்தால்தான், தமிழர்களுக்கு அரசாட்சியில் வேலை கொடுப்போம்'. என்று இலங்கைத் தலைமையமைச்சர் பண்டார நாயகா அறிவித்து இருக்கிறார். இதற்கான புதியச் சட்டத்தையும் அவர் கொண்டு வந்து இருக்கிறார்.

www.thamizham.net - Free E book No 7503

சிங்களர் வல்லாண்மை!

அதனால், தேர்தல் நடக்கிற காலத்தில் சிங்களரே 'பெரும்பான்மையாக'ச் சட்ட மன்றத்துக்கு வருகிறார்கள். அதனால், சிங்களர் வல்லாண்மையில் அரசு அமைய நேரிடுகிறது. இதன் காரணமாகத் தமிழர்களுக்கு எல்லாத் தொல்லைகளும் உண்டாகின்றன.

தாயகத் தமிழர்கள்

இதைப்போலவே, தாயகத் தமிழ்நாட்டில் உள்ள தமிழர்களும் 'சிறுபான்மையர்' என்ற நிலையில்தான் இருக்கிறார்கள். 4 கோடிப் பேர் தமிழர்கள் இந்தியா தேசத்தில் வாழ்கிறார்கள் என்றால், 36 கோடி பேர் தமிழர்—அல்லாதார் வாழ்கிறார்கள். ஆகையால் தமிழர்—அல்லாதாருக்குப் 'பெரும்பான்மை' நிலையும், தமிழருக்குச் 'சிறுபான்மை' நிலையும் இருக்கிறது.

இந்த நிலையின் காரணமாகத்தான் இந்தியாவில் வாழ்கிற தமிழர்களுக்கு எல்லாத் தொல்லைகளும் ஏற்படுகின்றன. தமிழ் மொழிக்குத் தீங்கு ஏற்படுகிறது என்றால், அதற்குக் காரணம். இந்தியாவில் தமிழ் மொழி பேசுகிறவர்கள் சிறுபான்மையாக இருப்பதுதான்!

துன்பம் ஒழிய வழி!

ஆகவே, தமிழ் மக்களுடைய துன்பங்கள் ஒழிய வேண்டுமானால், இந்தச் சிறுபான்மையான நிலையை ஒழிக்கவேண்டும்.

தமிழ்நாடு தனி நாடாகப் பிரிந்தால், அந்த உரிமை நாட்டில் தமிழ் மக்கள் 'பெரும்பான்மையாக' வாழுவார்கள். அதனால், தமிழ் மொழியின் மதிப்பு ஓங்கும். தமிழ் மக்களின் வாழ்க்கைத்தரம் உயரும்.

திராவிடம்!

தமிழர்கள், கன்னடர்கள், தெலுங்கர்கள், மலையாளிகள் ஆகிய 4 பேரும் சேர்ந்து, 'திராவிடம்' என்ற திராவிட அமைப்பை ஏற்படுத்தினாலும் தமிழ் மக்களின் தொல்லை தீராது. ஏன் என்றால், திராவிடத்தில் தமிழ் மக்கள் 4 கோடி பேர் இருந்தால், தமிழர் அல்லாதார் 6 கோடிப் பேருக்கும் அதிகம் இருப்பார்கள் அஃதாவது, திராவிடத்தில் தமிழர்கள் சிறுபான்மையாகத்தான் இருப்பார்கள். அந்த நிலையில் தமிழ் மக்களுக்கு இப்போதுள்ள தொல்லைகள் நீடிக்கத்தான் செய்யும்.

'யூதர்கள்' வரலாறு!

சிறுபான்மை நிலை ஒழிந்தால்தான் தமிழ் இனம் வாழமுடியும்

www.thamizham.net - Free E book No 7503

என்பதற்கு எடுத்துக்காட்டாக யூதர்களின் வரலாற்றைச் சொல்லலாம்.

செர்மனி இங்கிலாந்து, ஆசுத்திரியா முதலிய பல நாடுகளில் யூதர்கள் 'சிறுபான்மை'யாக இருந்தார்கள். எல்லா நாடுகளிலும் அவர்கள் அடைந்த தொல்லைகளுக்கு அளவு கிடையாது.

இன்று தமிழர்களைப் பிற நாடுகளில் அடித்து விரட்டுவது போல, யூதர்களை எல்லா நாட்டுக்காரர்களும் அடித்து விரட்டினார்கள் கடைசியில், உலகம் முழுவதும் சிதறிக் கிடந்த யூதர்கள் 8 இலக்கம் பேர் 1948-ஆம் ஆண்டு அரேபியா பாலைநிலத்தில் ஒன்று சேர்ந்து அங்கு 'இசுரேல்' என்ற முழு உரிமைத் தனி நாட்டை அவர்களுக்கென்று அமைத்தார்கள். பல நாடுகளில் சிறுபான்மையினராக இருந்த அவர்கள் 'உரிமை நாடு' அமைத்தவுடன், அவர்களுடைய தொல்லைகள் நீங்கின.

தனி நாட்டின் சிறப்பு

அந்த நாட்டில் இப்பொழுது மொத்தம் 17 இலக்கம் பேர்கள் தாம் வாழுகிறார்கள். என்றாலும் அவர்களுக்குச் சொந்தக் கொடியும், சொந்த ஆட்சியும், சொந்தப் படையும் இருப்பதன் காரணமாக, உலகத்தில் யூத மக்களுக்கு ஓர் உயர்வான நிலை ஏற்பட்டுள்ளது.

யூதர்களுடைய வரலாறு தமிழ் மக்களுக்கு நல்ல எடுத்துக் காட்டாக இருக்கிறது.

தமிழ் மக்கள் 400 இலக்கம் பேர் இருந்தாலும் 'இந்தியா' என்ற அமைப்பில் சிறுபான்மை நிலையில் இருப்பதால், வறுமையிலும், துன்பத்திலும், அடிமைத்தனத்திலும், சிக்கித் தவிக்கிறார்கள். இந்த 400 இலக்கம் பேரும் தன்னுரிமையுடன் இருந்தால், இசுரேல் நாட்டைவிட 24 மடங்கு பெரிதாகத் தமிழ்நாடு இருக்கும்.

இன்றுள்ள 'சிறுபான்மை'த் தன்மையை உடைத்தெறிந்து, 'உரிமைத் தமிழ்நாடு அடைந்தால் தமிழர்கள் புதுவாழ்வு பெறுவார்கள்.

(தொடரும்)

அன்பர்கள் கவனிக்க

பொறுப்பாசிரியர் அவர்களை வந்து காணவும், கண்டு பேசவும் விரும்பும் அன்பர்கள், காரி, ஞாயிறு ஆகிய நாள்களில் மாலை 5-மணிக்குமேல் வருமாறு கேட்டுக் கொள்ளப் பெறுகிறார்கள். வெளியூர் அன்பர்கள் முன்கூட்டியே எழுதி விடை பெற்றுக் கொண்டு வர வேண்டும்.

—**அமைச்சர்.**

www.thamizham.net - Free E book No 7503

மார்க்சின் கல்லறையில், பிரடெரிக் ஏங்கல்சின் உருக்கமிகு சொற்பொழிவு! (மார்ச்சு 17, 1883)

—இ. செம்பியன், புதுவை

உண்ண உணவின்றி, உடுக்க உடையின்றிப், படுக்க பாயின்றி, ஒடுங்க ஓர் இடமும் இன்றி, அல்லல்பட்டு ஆற்றாது கண்ணீர்ச் சிந்திக் கதறியழுகின்ற மக்கள் பல்லாயிரவர்கள் வாழ்ந்து வருகின்றனர். அவர்களுக்கு நடுவே அணி மணிகள் பல பூண்டு, ஆரவாரக் கோலத்திலே, செல்வச் செழிப்பிலே, செழுமைக் கொழுப்பிலே, கவினுடனும் களிப்புடனும் உலாவருகின்ற மேட்டுக்குடியினர் சிலர் இருக்கின்றனர். இத்தகு இழிநிலை இருப்பதற்கான கரணியங்கள் எவை? மதம் விடை பகிர்கிறது; 'வறுமையும் செம்மையும் அவரவர் தலையெழுத்துப்படியே அமையும்' என்று! ஆனால், அவரோ, அந்த ஒருவரோ, 'மதம் அபினி போன்றது மக்களுக்கு!' என்று எடுத்துரைத்தார்.

இவ்வுலகில் எல்லாரும் ஏற்றம் பெற்று வாழ முடியும்! வளமும் நலமும் பெற்றுத் திகழ முடியும்! அதற்குத் தேவையான மூலப் பொருட்கள் (Means of Production) ஆகிய நிலம்—நீர்—காற்று—கனிச்செல்வங்கள் - தோட்டங்கள்—துரவுகள்—காடு கழனிகள் எல்லாம் மிகுதியாக இருக்கின்றன. இவையனைத்தும் ஒரு சில மேட்டுக் குடியினர்க்கே, செல்வர்களுக்கே, உரிமையாக இருக்கின்ற கரணியத்தால் அவர்கள் மட்டும் உழைக்காமல் ஊரைச் சுரண்டி, உண்டு கொழுத்து உலா வந்து கொண்டிருக்கின்றனர். இவையேதும் இல்லாத எண்ணற்ற ஏழைமாந்தர் தமது உழைப்பை மேட்டுக் குடியினர்க்கும் புதிய முதலாளியர்களுக்கும் (Bourgeoisie) படையலாக்கி, உழைத்து ஓடாகி, உருத் தெரியாமல் போகின்றனர்.

மாந்த வரலாற்றின்படி பார்த்தால், முற்காலத்தில் மாந்தர் தமக்குக் கிடைத்ததைப் பகுத்துண்டே வாழ்ந்து வந்திருக்கின்றனர். அதற்குப் பிறகு அவர்கள் அடிமைகளாக மாற்றப்பட்டனர். பின்னர் நிலக்கிழமைக்கு (Feudalism) அடிமைப்படுத்தப்பட்டனர். இப்போதோ அவர்கள், கருவிகளை வைத்துத் தொழிலகங்களை நடத்தும் முதலாளியர்களுக்கு (Bourgeoisie) உழைப்பென்னும் குருதியைக் கொட்டிக் கொடுத்திடும் தொழிலாளர்களாக இருக்கின்றனர் ஆனால், இம்முறை உலகில் நீடித்து நிற்காது. பாட்டாளியினம் பொங்கியெழுந்து புரட்சி செய்து புதியதொரு சமத்துவ ஆட்சியை அமைக்கும்; அதன் பின்னர் அந்த ஆட்சியோ பொதுவுடைமைப் பூங்காவாக மலர்ந்து மாந்த இனம் முழுவதற்கும் மணம் வீசி நிற்கும்;' என்கின்ற ஏற்றமிகு—ஆற்றல்மிகு கருத்துகளை அறி

www.thamizham.net - Free E book No 7503

வியல் முறையில், வரலாற்று முறையில், மெய்யறிவு முறையில் நிறுவிக் காட்டினார், அவர். அவர்தாம், **காரல் மார்க்சு** Karl-Marx). இத்தகு, மாந்த வாழ்வு மறுமலர்ச்சிக் கருத்துகளைப் பரப்புவதற்காகவே அவர். அல்லும் பகலும் அயராது உழைத்து வந்தார். அவர்க்கு அரிய துணையாய் வாய்த்து, அவரின் நோக்கிற்கும் போக்கிற்கும் ஊக்கமூட்டி, ஆக்கம் தந்து அரவணைத்து வந்தவர், உதவி பல தந்தவர், **பிரடெரிக் ஏங்கல்சு** (Friedrich Engles) என்னும் செல்வக் குடிமைச் சேர்ந்த செருமானிய அறிஞராவார். இருவரும் இணைந்திருந்தே தொழிலாளர் உலகிற்குத் தூய தொண்டினைச் செய்து வந்தனர். அந்த, 1883-ஆம் ஆண்டு மார்ச்சுத் திங்கள் பதினான்காம் பக்கல் மார்க்சு மண்ணுலகிலிருந்து மறைந்து விட்டார். மழை மிகுந்த மார்ச்சுத் திங்கள் பதினேழாம் நாள், மதியம், எட்டு நண்பர்கள் பின் தொடர அவரின் பிணப் பெட்டி கல்லறையை நோக்கி மெல்ல நகர்ந்தது.

அதுபோது. அக் கல்லறையில் கல்லும் கரைந்துருகும் வண்ணம் ஏங்கெல்சு மார்க்சைப் பாராட்டிச் சில சொற்கள் பேசுகிறார் :

'தோழர்களே! மார்ச்சுத் திங்கள். பதினான்காம் நாள், இரண்டே முக்கால் மணிக்கு நமது காலத்தில் தோன்றிய மாபெரும் வாழ்வியல் சிந்தனையாளர், தமது சிந்தனையை நிறுத்திக்கொண்டார். இரண்டு நிமையங்களுக்கு முன்புதான் நாங்கள் அவரைப் பிரிந்திருந்தோம். பின்பு நாங்கள் திரும்பி வந்து பார்த்தபோது. அவர் நாற்காலியில் அமைதியாக உறக்கத்தில் ஆழ்ந்திருந்தார்; அஃது என்றும் மீள முடியாத உறக்கம். ஐரோப்பிய, அமெரிக்க புரட்சிகரமான தொழிலாளர்க்கும், வரலாற்று அறிவியல் துறைக்கும், இம் மாந்தரின் இழப்பு, ஈடுசெய்ய முடியாத மாபெரும் இழப்பாகும். ஆழம் காண முடியாத அறிவுக் கடலுக்கு இவர் மறைவினால் ஏற்பட்டிருக்கும் இடைவெளியை நம்மால் ஈடுசெய்ய இயலாது. இவ்வுண்மையை நாம் விரைவில் உணர்ந்தாக வேண்டும்.

உயிரின் வளர்ச்சிக் கோட்பாட்டைத் தார்வின் கண்டு பிடித்ததைப் போன்று, மாந்த வரலாற்று வளர்ச்சிக் கோட்பாட்டை மார்க்சு கண்டுபிடித்தார். ('As Darwin discovered the law of evolution in organic nature, so Marx discovered the law of evolution in human hi tory') மிகவும் எளிய உண்மை கருத்து முதல் கண்ணோட்டத்தில் (ideology) மறைந்திருந்தது; அந்த மறைவென்னும் திரையை மார்க்சு கிழித்தெறிந்தார். மாந்தனது எண்ணம், அரசியல் அறிவியல் கலை, மதவியல் முதலியவற்றால் ஈர்க்கப்படு முன், அவனுக்கு அடிப்படை இன்றியமையாத தேவைகளான, உண்ண உணவும், உடுக்க உடையும், இருக்க இடமும்

www.thamizham.net - Free E book No 7503

ஒவ்வொருவருக்கும் கட்டாயம் இருக்கவேண்டும், என்கின்ற எளிமையான உண்மையை மார்க்சுதான் முதன் முதலில் கண்டு கூறினார். எனவேதான், அரசியல், குமுகாயம், மதம், பண்பாடு முதலிய அனைத்து நிறுவனங்களும், பொருளியல் அடிப்படையில்தான் அஃதாவது, வாழ்க்கைக்குத் தேவையான மூலப் பொருள்களின் உருவாக்க முறையைப் பின்பற்றியே நிறுவப்படுகின்றன.

அதோடு மட்டுமன்று; இன்றைய நாட்களின் முதலாளிய உருவாக்க முறை — அதன் மூலம் உருவாகும் முதலாளியக் குமுகாய அமைப்பு முறை (Bourgeoisie system of society) ஆகியவற்றின் வளர்ச்சிக் கோட்பாட்டைக் காரல் மார்க்சு குறிப்பிடத் தகுந்த முறையில் கண்டு கூறினார். இதற்கு முன்பாக முதலாளிய—சமனிலைப் பொருளியல் வல்லுநர்கள், தங்கள் ஆய்வுகளின் மூலம்கண்டு கொள்ள முடியாமல் இருளிலே இடர்ப்பட்டுக் கொண்டிருந்த காலை, இவர் கண்டுரைத்த, மிகை மதிப்பு (Surplus Value) பளிச்சென்று ஓர் ஒளியைத் தோற்றுவித்தது.

ஒருவர், பெருமகிழ்வடைவதற்கு இத்தகு இரு பெரும் கண்டுபிடிப்புகளே போதுமானதாகும்; அல்லது இவை இரண்டில் ஒன்றைக் கண்டுபிடித்தலே போதுமானதாகும். ஆனால், மார்க்சு அத்துடன் நின்றாரில்லை; ஒவ்வொரு துறையிலும் அவர் தனிச் சிறப்புப் பெற்றுத் திகழ்ந்தார்; கணித வியலுக்குக்கூட அவர் தமக்கே உரிய கண்டுபிடிப்புகளை எடுத்துரைத்தார். இதுபோன்று அவர் ஓர் அறிவியல் மாந்தராகவே (Man of Science) திகழ்ந்தார். இப்படி உரைப்பது கூட அவரை முழுவதுமாக உணர்ந்ததுபோல் ஆகாது.

மார்க்சுக்கு அறிவியல், உருக்கமான, வரலாற்று வழியான வலிமைமிகு புரட்சியாற்றலாக விளங்கியது.—(For Marx, Science was a creative, historic and revolutionery force) அறிவியல் துறையில் அவரின் புதிய கண்டுபிடிப்புகள், அவர்க்குப் பெரிதும் மகிழ்வை நல்கின. நடைமுறைக்கு உட்பட்ட அவரின் கண்டுபிடிப்புகள், நேருக்கு நேர் தாக்கக் கூடியனவாய் இருந்தன. அவரின் புதுக் கண்டுபிடிப்புகள், தொழில் துறையிலேயும்,வரலாற்றுத் துறையிலேயும் புரட்சிகரமான மாறுதல் பெற்று, வளர்ச்சிக்கு உள்ளாவதைக் கண்டு அவர் பெரிதும் மகிழ்ந்தார்.

மார்க்சுக்கு முன்னால் அனைத்தும் புரட்சியாகவே தோன்றின. அவரது வாழ்வின் பெரும்பணி, இவ்வகையாலோ வேறு வழியிலோ, முதலாளியக் குமுகாய அமைப்பைத் தாக்கி எறிய வேண்டும் என்பதிலேயே இருந்தது. புதிய தொழிலாளர் இனத்திற்கு (Modern-Proletariat) உரிமை வேண்டும்—அடிமைத்தளை அறுபடவேண்டும் என்ற உணர்வை ஏற்படுத்தி, அவர்களுடன் கூட்டுறவாக இருப்

www.thamizham.net - Free E book No 7503

பதும் அவர் வாழ்வின் பணியாக இருந்தது. வகுப்பின் நிலை (Class Position), வகுப்புப் போரின் (Class Struggle) தேவை, வகுப்பாரின் அடிமைத்தளை அறுபடுவதற்கான அறிவு—முதலியவை பற்றிய உணர்வினை முதலாவதாக ஏற்படுத்தியவரும் இவரே! போராட்டமே அவருக்குச் சிறந்த கருவியாக இருந்தது. அவர், ஆழ்ந்த உணர்வோடும் மிகுந்த பிடியுறுதியோடும் போராடினார்; ஒரு சில போராட்டங்களில் வெற்றியும் பெற்றார். முதலாவதாக அவரது வேலைத் திட்டம் கிழமை இதழ்களிலும் திங்களிதழ்களிலும் புரட்சிக் கருத்துகளை எழுதுவதிலிருந்தது; பின்னர் சிறு வெளியீடு (Pamphlets)களில் இருந்தது. அதன் பின்பு, பிரான்சு, இலண்டன், பிரசல்சு (Brussels) முதலிய இடங்களில் அமைப்புகள் ஏற்படுத்துவது அவரின் வேலையாக இருந்தது. எல்லாவற்றிற்கும் மேலாக முடிசூடுவது போன்றிருந்தது, அவர் அமைத்த உழைப்பாளர் இணையம் (International working men's Association) என்னும் அமைப்பு. இந்தப் பேராசிரியர் வேறு எதுவும் செய்யாமல் இருந்தாலும் கூட இஃது ஒன்றே அவர் வாழ்வில் பெருமைப்படத்தக்க மாபெரும் பணியாக நின்று நிலைத்திருக்கும்.

இறுதியுரைக்கு வருகிறேன்! இதுபோன்ற பணிகளால்தான் அவர், தமது காலத்தில் மிகவும் விரும்பப்பட்டவராகவும் மிகவும் வெறுக்கப்பட்டவராகவும் விளங்கினார். குடியரசு ஆட்சிகளும் முடியரசு ஆட்சிகளும் அவரை நாடு விட்டு நாடு துரத்தியடித்தன. முதலாளி வகுப்பினர்—அவர்கள் பழமையாளராக இருந்தாலும், மக்களாட்சியின்பால் பற்றுடையவராக இருந்தாலும், அவர்மீது போட்டி போட்டுக்கொண்டு தூற்றல் மொழிகளை வீசி எறிந்து கொண்டிருந்தனர். அவையனைத்தையும் அவர் தூசு தட்டுவது போல் தட்டிவிட்டுக் கொண்டிருந்தார். மிகுதியான கட்டாயத்திற்கு அவரை, அவர்கள் அனைவரும் உள்ளாக்கும் போதுதான், அவர் அதற்கு விடை பகர்ந்தார். அப்படியில்லையெனின், அவர், அவற்றை புறக்கணிப்புச் செய்தார்.

ஐரோப்பா, அமெரிக்கா முழுவதும், சைபீரிய சுரங்கத் தொழிலாளர்களிலிருந்து கலிபோர்னியா தொழிலாளர் வரை அனைவரும் அவரை விரும்பினர்; மதித்தனர்; போற்றினர். பல இலக்கக் கணக்கான புரட்சித் தோழர்கள் கண்ணீர் விட்டுக் கதறியழும் வண்ணம், அவர் இறந்துவிட்டார். நான் இந்த இடத்தில் மிகத் துணிவாகச் சொல்லிக்கொள்ள விரும்புவது யாதெனில் அவர்க்குப் புறப்பகைவர்கள் பலர் இருந்தாலும், அகப் பகைவர் ஒருவரும் இலர்.

அவரின் நூல்களும் அவரது பெயரும் ஊழியூழிக் காலமும் அழியாது நீடித்து நிலைபெற்று நிற்கும்! கணக்கற்ற நூற்றாண்டுகள் சுடர்விட்டு எரியும் என்பது மட்டும் உறுதி! நீடுவாழ்க புரட்சி!'

www.thamizham.net - Free E book No 7503

தமிழைக் காப்போம்!

—புலவர். பொதிகைச்செல்வன்.

1. பெற்ற செந்தமிழ்த் தாயை மாய்த்திடப்
பேதை யர்சிலர் கூடி—அன்னை
பெருமை சாய்த்திட நாடிச்—செய்த
பேரி டர்களோ கோடி! —அந்தப்
பேரி டர்களைக் கூறி டற்குநாப்
பேதுறும் மிக வாடி!

உற்ற ஏடுகள் பற்பல வற்றை
ஓங்கு தீயிடை யிட்டார் —விரைந்
தோடும் வெள்ளத்தில் விட்டார்! —அந்த
உள்ள மேமிகக் கெட்டார்!—தமிழ்
ஓது நூல்களில் தீது சேர்நெறி
உள்நு ழைபணி தொட்டார்!

2. சொற்கள் பற்பல தூவி னார்,களைத்
தூறெ னத்தமிழ்க் காட்டில்!—பல
துறைது றைதொ றும் ஏட்டில்!—கண்
துஞ்சி டாதவர் கேட்டில்! —நிகர்
சொல்லொ ழிந்தவர் நல்ல ரேயெனத்
தூங்கி னார்மக்கள் நாட்டில்!

கற்கள் மண்டிய சோறெ னத்தமிழ்
காட்சி தந்ததைக் கண்டு—சிலர்
கவலை யேமிகக் கொண்டு—தீமை
கடிந்து ரைத்ததும் உண்டு—மிகக்
கற்ற மாந்தரும் குற்ற மேயெனக்
கருதி லர்இதைப் பண்டு!

3. இந்தி யென்றிடும் செந்தீ யால்மனம்
இந்நா ளில்மிகக் கன்றி —அன்னை
ஏங்கி னாள்நலம் குன்றி—கண்ட
ஏற னார் தாயின் வென்றி—நாடி
ஏகி னார்அறப் போரில் மாய்ந்துபின்
ஏறி னார் புகழ்க் குன்றில்!

வெந்தி றந்தநல் வீரர் எண்ணமும்
வேகு மோகொடுந் தீயில்?—வெந்தால்
வீழு மேதமிழ் நோயில்!—கொடும்
வீண ரால்தமிழ் மாயில்—நீயும்
வெற்றெ னஇங்கு நிற்பையோ? சொல்வாய்!
வீர னேஉன்றன் வாயில்!

www.thamizham.net - Free E book No 7503

ஆண்களுக்கு ஏற்படும் பாலியல் கோளாறுகள்

—மருத்துவ அறிஞர். **கோ. கோவிந்தனார்.**

நீண்ட காலம் இக்கலவி ஒதுக்கு முறையை கைக்கொண்டால், பலவகையான நரம்புத் தளர்ச்சிகள் உண்டாகின்றன. புணரும் பொழுது, ஒளிநீரை எப்படி அடக்குவது என்பதிலேயே எப்பொழுதும் மனம் குவிந்து, அது பற்றியே நினைந்து நினைந்து, குழம்பி, நரம்புத் தளர்ச்சி உண்டாகிறது. இத்துடன் நரம்பு அதிர்ச்சியும் ஏற்படுகிறது.

இக்கலவி ஒதுக்கு முறையின் முதன்மையான நோக்கம், புணர்ச்சியில் ஒளிநீரை வெளியிடுவதில் கட்டுப்பாடு வேண்டும் என்பதுதான். முழுமையான இன்பம் துய்க்கக் கட்டுப்பாடு மிகமிக இன்றியமையாததுதான். புணர்ச்சி நோக்கும் திரும்பத் திரும்ப எழக்கூடிய ஒன்றாகும். ஒவ்வொரு முறையும் புணர்ச்சியின் முடிவு முழுமையாகவும், நன்மை பயப்பதாகவும் இருக்க வேண்டும். புணர்ச்சியில், முழுமை ஏற்படாதபடி உறுப்புகள் பிழையான வழியில் பயன்படுத்தப்பட்டால், தங்களைப் பிழையான வழியில் செலுத்திய அம் மாந்தனின், பால் வேலைகளைப் பழுதாக்கி, உறுப்புகள் தங்கள் சினத்தைத் தணித்துக் கொள்கின்றன. சில வேளைகளில் இவ்வுறுப்புகள் உடல் முழுவதையுமே கெடுத்துவிடுகின்றன. ஆகவே ஒவ்வொரு முறைக் கட்டுப்பாட்டின் பின், ஒளிநீர் வெளியே தள்ளப்படும்படி பார்த்துக்கொள்ள வேண்டும். அப்பொழுதுதான் உடல் உறுப்புகள் எல்லாம் அமைதி பெற்றுத் தங்கள் இயற்கை நிலை யடைந்து, நல்ல முறையில் இருக்கும்.

(முன்பக்கத் தொடர்ச்சி)

4. செந்த மிழ்த்திரு தன்னை யன்பொடு
   சிந்தையில் வைத்துக் காப்போம்! —கலைச்
   செல்வங் கள்பல சேர்ப்போம்! —வரும்
   தீய இந்தியை மாய்ப்போம்! —பணி
   செய்து செய்துயர் செந்த மிழ்க்கொளி
   சேர்த்துப் பன்னலம் பூப்போம்!

   நந்தம் முந்தையர் செந்த மிழ்தனை
   நாளும் போற்றிய பாங்கு—தனை
   நவிலக் கூடுமோ ஈங்கு? —வாழ்வில்
   நற்ற மிழ்வளம் தேங்கு—திறம்
   நன்று கண்டவர் போல நீயுமே
   நற்ற மிழ்வளர்த் தோங்கு!

www.thamizham.net - Free E book No 7503

அலித்தன்மைக்குப் பொது மருத்துவம்

அலித்தன்மையின் குறிகள், ஏற்படக் காரணங்கள் ஆகியவை பற்றி முன்பே ஆராய்ந்தோம். அலித்தன்மை மிகுந்த அளவில் பரவி உள்ளது என்பதையும், அதால் மணவாழ்க்கையும், இன்ப நிலையும் பாழாகின்றன என்பவற்றையும் கண்டோம். உடற் கோளாறு, உடல் வேலைகளில் கோளாறு, மனக் கோளாறு, மனக் கிளர்ச்சியில் கோளாறு ஆகியவற்றால் அலித்தன்மை தோன்றலாம் என்பதையும் கண்டோம். இஃது ஒரு நோய் அன்று. உடல் அடிப் படையிலும், மன அடிப்படையிலும் ஏற்படும் கோளாறுகளே அலித் தன்மை தோன்ற மூலங்களாம். அலித்தன்மையைப் பற்றி ஒரு வாறு அறிந்தோம். இனி அதைப் போக்க மருத்துவம் என்ன என் பதைச் சிறிது நோக்குவோம்.

தகுந்த முறைகளைத் தொடர்ந்து கைக்கொள்ளின் நோயாளி களில் ஒரு சிலர் தவிர மற்றவர்களை உறுதியாக நலமாக்க முடியும். பிறப்பிலேயே கலவி உறுப்புகள் பழுது அடைந்தவர்களுக்கும், வேலை செய்யத் திறன் அற்ற கலவி உறுப்புகளை உடையவர்களுக் கும், கலவி உறுப்புகளுக்குக் குறிப்பிட்ட கேடு உடையவர்களுக்கும் எவ்வகை மருத்துவம் செய்யினும் பயன் படாது. அலித்தன்மை உடையவர்களில் பலர் தங்களுக்கு அந்நோயிலிருந்து விடுதலையே கிடையாது என நினைக்கின்றனர். அப்படி நினைப்பவர்கள் எல்லாம் பால் பற்றிப் பேசவே துணிவில்லாதவர்களும், கூச்சமுடையவர் களுமாம் தங்கள் அலித்தன்மையைப் போக்க ஒரே ஒரு மருத்து வரைக் கூட அணுகி இருக்க மாட்டார்கள் என்பது திண்ணம். அப்படி அணுகி இருந்தாலும் போலி மருத்துவரை நம்பி ஏமாறிய வர்களாகவே இருக்க வேண்டும். அல்லது செய்தித் தாள்களில் விளம்பரப்படுத்தப்படும் பலவகைப் போலி மருந்துகளை கைக் கொண்டு மனம் சலித்தவர்களாக இருக்க வேண்டும், இவ்வாறு பிழைபட்ட வழிகளை கைக்கொண்டு, 'அலித்தன்மையைப் போக்கத் தங்களால் இயன்றதை எல்லாம் செய்து பார்த்தாகி விட்டது; அது நீங்கவில்லை; அதை நீக்க வழியே கிடையாது' என்ற தவறான முடி விற்கு வந்து விடுகின்றனர்.

மருத்துவ வல்லுநர் மூலமாக மருத்துவம் நடைபெற வேண்டும் அந்த வல்லுநர் பால் கோளாறுகளை நலமாக்குவதில் கை தேர்ந்தவ ராக இருக்க வேண்டும். எவ்வகைக் காரணம் கொண்டும் போலி மருத்துவரிடம் அகப்பட்டுக் கொள்ளக்கூடாது. விளம்பரம் செய் யப்பட்ட மருந்துகளை வாங்கும் பொழுது, பெரிய பெயர் பெற்ற, குற்றத்திற்கு இடமின்றி உருவாக்குவதில் வல்லவர்கள் என்று உறுதி செய்யப்பட்ட மருந்து செய்து வெளியிடுபவர்கள் மருந் தையே வாங்க வேண்டும். ஊர், பெயர் தெரியாதவர்கள் செய்யும் மருந்தை வாங்கிப் பயன்படுத்தக் கூடாது.

www.thamizham.net - Free E book No 7503

அலித்தன்மைக்கு மருத்துவம் செய்வது பெரிய சிக்கலான செயலாகும். ஏன் எனில், ஒவ்வொரு நோயாளியும் ஒவ்வொரு புது வகை நோயால் தாக்கப்பட்டவர் போன்று காணப்படுவர். ஒவ்வொரு புதுவகை நோயையும் ஆய்ந்து அதற்கு உரிய மருந்தைத் தேர்ந்தெடுக்க வேண்டும். இந்நோய்க்கு மருத்துவம் செய்வதில் வல்லுநர்களே தங்களுக்குள்ளேயே அலித்தன்மையின் அடிப்படைத் தன்மையைப் பற்றி மாறுபட்ட நோக்கங்களைத் தெரிவிக்கின்றனர். ஆகவே அலித்தன்மைக்கு மருத்துவம் செய்யச் சொல்வதிலும் ஒரே வகையாகக் கூறுது பல்வேறு வகைகளாகக் கூறுகின்றனர். இது வேறு அலித்தன்மைக்கு மருத்துவம் செய்வதில் சிக்கலை மிகுதியாக்குகின்றது. "கலவி உறுப்புகளில் கோளாறுகள் இருந்தால், அக்கோளாறுகளை நீக்க, உறுப்புகளின் மேல், உரிய மருந்தை மேல் தளவாடமாகப் போட்டு, நலமாக்க முயலாம். இயக்குநீர் (கார்மோன்) குறைவால் அலித்தன்மை உண்டானால், உரிய இயக்குநீரை (கார்மோனை) வேண்டிய அளவு உடலில் செலுத்தி நலம் காணலாம். மன அலித்தன்மைக்கு உளநூல் முறைப்படி நலம் காண முயலலாம்'' இவ்வாறு சிலர் நினைக்கலாம். ஆனால் அவர்கள் நினைக்கிறபடி அலித்தன்மைக்கு மருத்துவம் செய்வது அவ்வளவு எளிதன்று.

மேலே கூறிய மூன்று முறைகளையும் ஒன்று சேர்த்துக் கைக்கொள்ள வேண்டிய கட்டாயம் ஏற்பட்டாலும் ஏற்படலாம். ஒரு முறைப்படி நலம் காணும் அறிகுறியே தெரியவில்லையானால், உடனே வேறு முறையைக் கைக்கொள்ள வேண்டும். இஃது இன்றியமையாததாகும். ஏன் எனில் ஒரு முறையால் நன்மைக்கு அறிகுறியே தோன்றாவிடின், நோயாளிக்குத் 'தன் நோய் போக்க வல்லதன்று' என்ற தவறான எண்ணம் அவர் மனதில் பதிந்து அதனால் மருத்துவம் செய்வது மேலும் சிக்கல் நிறைந்ததாக ஆகிறது. அவ்வகை எண்ணமே போதும், அலித்தன்மை உண்டாக. ஆகவே அவ்வகை எண்ணம் கடுகளவும் உண்டாகாதபடி பார்த்துக்கொள்ள வேண்டியது மருத்துவரின் தலையாய வேலையாகும்.

அலித்தன்மைக்கு மருத்துவம் செய்து நலம் கண்டவர், எவ்வகைக் காரணம் கொண்டும் தன்னம்பிக்கையை இழக்காதபடி பார்த்துக்கொள்ள வேண்டும். தன்னம்பிக்கையை இழந்து, பழைய நிலைக்கே திரும்பிவிடுவோமோ என அஞ்சிக் கொண்டே இருந்தானால், அந்த நினைப்பே போதும், பழைய நிலையை உண்டாக்க. முன் மருத்துவம் செய்ததெல்லாம் பாழ். சில வேளைகளில் நோயாளி, மருத்துவர் கூறியதை பொருட்படுத்தாது, தொடர்ந்து செய்ய வேண்டியவற்றைச் செய்யாது விட்டு விட்டால், முன் செய்த மருத்துவத்தின் பயனால் உண்டான நன்மைகள் தேய்ந்து, பழைய அலித்தன்மை வந்தடையலாம். கலவி இன்பம் துய்ப்பதில் ஓர் ஒழுங்கு

www.thamizham.net - Free E book No 7503

முறையைக் கைக்கொள்ள வேண்டும். கலவி இன்பத்தைத் தவிர்க்கவும் கூடாது. மிகுதியான இன்பம் துய்க்கவும் கூடாது. அல்லது தவிர்த்தலையும், துய்த்தலையும் மாற்றி மாற்றிச் செய்யவும் கூடாது. முதன் முதல் அலித்தன்மை உண்டாவதற்குக் காரணமாய் இருந்ததின்பேரில், அஃது எப்பேர்ப்பட்டதாயினும் சரி, எப்பொழுதும் அதன்பேரில் ஒரு கண் இருந்து கொண்டே இருக்க வேண்டும். அக் காரணம் எந்த உருவிலும் மறுபடி நுழைந்து விடாதபடி பார்த்துக் கொள்ளவேண்டும்.

ஓர் ஆண்டில் அல்லது இரண்டு ஆண்டுகளில் அல்லது அதற்கும் குறைவான கால அளவில் எவ்வளவுதான் விழிப்புடன் இருந்தாலும் பழைய கோளாறு வந்தடையலாம். மிகுதியாக, கிழவர்களுக்கு இந்நிலை ஏற்படுகிறது. ஆகவே அவர்களுடைய உறுப்புகளும், கூறுகளும் மறுபடியும் மருத்துவத்தின் மூலம் முறுக்கேற்றப்பட வேண்டும். சில நாள் இடைவெளிக்குப் பின், சிறுநீர்ப்புற வழியின் பின் பகுதியில் மேல் தளவாட மருந்துகளைப் பயன்படுத்துவதும், சார மருந்துகளை உட்கொள்வதும் சில குளிப்பு முறைகளையும், பிடித்துவிடும் முறைகளையும் கைக்கொள்வதும் மற்றும் ஒவ்வொருவருக்கும் தனித்தனியாகச் செய்ய வேண்டியவற்றைச் செய்வதும், ஒழுங்காக நடைபெற்று வருமானால், இழந்த அவர்கள் பால் ஆற்றலைப் பெற்றுப் பல ஆண்டுகள் இன்பம் துய்க்கலாம். இல்லாயின் அன்றே அவர்கள் இன்பத்தை இழப்பர். பால் உணர்ச்சி குறையத் துவங்கிய உடனேயே மருத்துவரைக் கலந்தால், நிலைமையை மிக எளிதாகக் கட்டுப்படுத்தலாம். பால் உணர்ச்சி எல்லாம் மங்கிய பின் மருத்துவரை நாடின், நன்னிலையை அடைய அரும்பாடுபட வேண்டும்.

வரு முன்னர் காத்தல் வந்த பின் மருத்துவம் செய்வதை விட மிக மிக எளிது. 'வருமுன்னர்க் காவாதான் வாழ்க்கை எரிமுன்னர் வைத்தூறு போலக் கெடும்' என்பது பொதுமறையன்றோ. அலித்தன்மை வரக் காரணமானவற்றை விலக்கல் வேண்டும். மற்றவர்களை விட, இளைஞர்கள் இதை நன்கு நோக்க வேண்டும் இளைஞர்களிடையே தோன்றும் இக் கோளாறை நீக்குவது, முதியோர்களிடையே தோன்றும் இக் கோளாறை, நீக்குவதைவிட எளிது. இளைஞர்கள் இதை எண்ணிப் பார்ப்பது இல்லை. ஆனால் நேர்மையான தந்தை, தம் மகனின் பிற்கால நல்வாழ்வை இணைந்து தம் மகனுக்கு இது பற்றி அறிவுறுத்த முயல வேண்டும். அவர் தம் மகனிடம் இதுபற்றித் தாமே அறிவுறுத்த இயலாதவராகவோ கூச்சம் உள்ளவராகவோ இருந்தால், தகுந்த மருத்துவரிடம் தம் மகனை அழைத்துச் சென்று அறிவுறுத்தச் செய்ய வேண்டும். இளைஞனாக இருக்கும் பொழுதிருந்தே பால் வாழ்க்கை பற்றிய சரியான ஒழுங்கான முறை அவனுடைய குருதியோடு கலந்திருக்கச் செய்ய வேண்டும்.

www.thamizham.net - Free E book No 7503

தென்மொழி இயக்கம் - அறிக்கை-1.

ஆங்காங்குள்ள 'தென்மொழி' அன்பர்களை ஒருங்கிணைத்து ஓர் இயக்கம் தொடங்க வேண்டும் என்பதாக, அன்பர்கள் பலரும் எமக்கு மடல்கள் வழி எழுதியும் நேரில் கருத்தறிவித்தும் வந்திருக்கின்றனர். தென்மொழிக் கொள்கைகளை முன் வைத்து ஓர் இயக்கமாகச் செயற்படுவதில் உள்ள பல்வேறு வகையான இடர்ப்பாடுகளையும், பொருளியல் நிலைகளையும் கருதி, அதுபோலும் ஓர் இயக்கத்தைத் தொடங்குதற்கு இதுநாள் வரை, பெரிதும் தயங்கி வந்தோம். ஆனால் இக்கால் அவ்வெண்ணத்தைச் செயல்படுத்தும்படி, மீண்டும் சென்னையிலுள்ள அன்பர்கள் சிலரும் வெளியூர் அன்பர்கள் பலரும் மிகவும் வலியுறுத்தத் தொடங்கியுள்ளனர்.

எனவே, இதன் முதற்கட்டமாக இவ்வறிவிப்பை வெளியிட வேண்டுவதாயிற்று.

தென்மொழியின் மூன்று கொள்கைகளான மொழி முன்னேற்றம், இன முன்னேற்றம், நாட்டு விடுதலை ஆகிய மூன்றையும் முன் வைத்து ஓர் இயக்கம் தொடங்குவதானால், இதில் ஈடுபடுவதற்கு அரசுப் பணியிலுள்ள சிலர் தயங்கலாம். முதலிரண்டு கொள்கைகளுக்காகப் பலர் இதில் ஈடுபட விரும்பி, வெளிப்படையாக உழைக்க எண்ணினாலும், மூன்றாவது கொள்கையான நாட்டு விடுதலைக் கொள்கைக்கென ஈடுபட விரும்புவார் மிகக் குறைந்த

(முன்பக்கத் தொடர்ச்சி)

கலவி இன்பத்திலேயே மூழ்கி விடாதபடியும், கலவியிலிருந்தே முழுவதும் விலகி இருக்காதபடியும், கலவி இன்பம் துய்ப்பதில் எப்பொழுதும் மிதமாகவே இருக்கும்படியும் பழக்க வேண்டும். உடலின் விருப்பத்திற்கு இணங்க ஒரு வரையறைக்கு உட்பட்டு, கை இன்பம் துய்த்தல் இயற்கை என்றே கொள்ள வேண்டும். இந்த வரையறையைத் தாண்டினால் கை இன்பத்தைக் கைவிட, அறிவுறுத்த வேண்டும். உடல் நலத்தையும் பொது அறிவையும் சுட்டிக்காட்டி அப்பழக்கத்தைக் கைவிடச் செய்யவேண்டும். இதில் மதத்தையும் ஒழுக்கத்தையும் நுழைக்கவே கூடாது. நுழைத்தால் அந்த இளைஞனின் பிற்கால வாழ்க்கையில் பல கேடுகள் உண்டாகலாம். கை இன்பம் செய்யப் பழகியதால், தான் ஏதோ பெரிய கரிசு (பாவம்) செய்து விட்டது போன்ற நினைப்பு அந்த இளைஞன் மனத்தில் இருந்து கொண்டே இருக்கும். அதை அவனால் மறக்கவே முடியாது. இந்நினைப்பு ஒன்றே போதும், அவனை மன அலித்தன்மை உள்ளவன் ஆக்க. வளரும் இளைஞனுக்குப் பால் உணர்ச்சி, இயற்கையாக எல்லோருக்கும் உண்டாக்க கூடியது தான் என்பதையும் அதைக் கட்டுப்படுத்த அறிவைப் பயன்படுத்த வேண்டும் என்றும் அறிவுறுத்த வேண்டுமேயன்றி, கரிசு போன்றதைக் காட்டி அச்சுறுத்தக் கூடாது. (தொடரும்)

www.thamizham.net - Free E book No 7503

எண்ணிக்கையினராகவே இருப்பர். மூன்றாவதைக் கருதி முன்னிரண்டிலும் கூட ஈடுபடுவதற்குப் பலரும் தயக்கம் காட்டலாம். எனவே, இது பற்றி முதல் முயற்சியாக, ஆங்காங்குள்ள அன்பர்கள் கருத்துகளைத் தெளிவாக அறிய விரும்புகின்றோம்.

ஆகவே, தென்மொழி இயக்கம் ஒன்று தொடங்கலாம் என்னும் முதல் கருத்து தொடங்கி, முடிவான சில கருத்துகளையும் அறிந்து கொள்ளும் நோக்கத்துடன் கீழே சில வினாக்கள் கொடுக்கப் பெறுகின்றன. அவற்றுக்கான விடைகளை அன்பர்கள் தனித்தனியாக ஒரு தனித் தாளில் எழுதி **'பொறுப்பாசிரியர், தென்மொழி'** என்னும் முகவரிக்கு விடுக்க வேண்டுகிறோம். வரும் விடைகள் கணிசமான அளவிற்கு இயக்கத் தொடக்கத்திற்குச் சார்பாக விருக்குமானால், இயக்க அமைப்பு மாநாட்டை வரும் 1981 — சனவரியில் சென்னையில் வைத்துக் கொள்ளலாம் என்று கருதுகிறோம். வரும் விடைகள் இயக்கத் தொடக்கத்திற்குச் சார்பாக அமையவில்லையானால், இயக்கத் தொடக்கத்தை இன்னும் சில காலத்திற்குத் தள்ளிப் போடலாம். வரும் கருத்துகளை ஆய்வு செய்யவும், அவற்றின் அடிப்படையில் ஒரு முடிவு செய்யவும் ஒரு குழு அமைக்கப் பெற விருக்கிறது. அக் குழுவில் யார் யார் உறுப்பினராக அமைவார்கள் என்பது பற்றி அடுத்த அறிக்கையில் தெரிவிக்கப் பெறும்.

எனவே பொதுநலமும் தமிழின முன்னேற்றமும் கருதி இவ்வறிக்கையைக் கண்ணுறும் அன்பர்கள், இது பற்றிப் பிறரிடமும் கூறி, இங்குத் தரப்பெறும் வினாக்களுக்குத் தவறாது, உடனடியாக விடைகளை எழுதி விடுக்கவும், விடுக்கும்படி செய்யவும் கேட்டுக் கொள்கிறோம்.

தென்மொழியின் மூன்று கொள்கைகள் தெளிவாக இங்குத் தரப் பெறுகின்றன.

1. **மொழிநிலை**யில், தூய தமிழ் வளர்ச்சியும் மலர்ச்சியும், அதனடிப்படையில் அமைந்த நல்ல இலக்கிய ஆக்கமும், மக்களுக்கு அறிவூட்டக்கூடிய அறிவியல், வரலாறு, வாழ்வியல், கலை பண்பாடு இவற்றின் நூலாக்கங்களும், அவற்றுக்கென உழைத்தலும்.

2. **இன நிலையில்,** சாதிகள் அறவே இல்லாத பொதுமைக் குமுகாய அமைப்புடையதும், பொருளியல் ஏற்றத் தாழ்வற்ற பொதுநிலைச் சமவுடைமைக் கோட்பாடுகளைக் கொண்டதுமான ஒரு மக்களமைப்பை உருவாக்குவதும், அதற்கென உழைத்தலும். (அம் மக்களமைப்பில் சமய உணர்வு அவரவர்களின் மன விருப்பத்திற்கும், அறிவு வளர்ச்சிக்கும் தக்கபடி அமைய வேண்டுவதால், பொதுநிலைக் குமுகாய அமைப்புக்கும் வளர்ச்சிக்கும் அது தொடர்புடையதாக இல்லாமல் இருக்கும். வெளிப்படையான சமய வினைகள் தடுக்கப் பெறும்.)

www.thamizham.net - Free E book No 7503

3. **நாட்டு நிலையில்.** மொழி, இலக்கிய, கலை, பண்பாடு இவற்றின் அடிப்படையில், மரபு வழிப்பட்டு வளர்ந்து வரும் தேசிய இனங்களின் நில விடுதலையே, உலகின் பொதுநிலை அரசியல் அமைதிக்கான வழியாகலின், தமிழ்த் தேசிய, நாட்டின அமைப்பின் கீழ், தமிழ்நாடு விடுதலை பெறுவதற்கும், தனித் தமிழ் நாடு அமைப்பதற்கும் உழைப்பது.

இம் மூன்று கொள்கைகளின் அடிப்படையில், அறிவறிந்த—தொண்டார்வம் கொண்ட மக்களின் கருத்துகளைத் தெரிவிப்பதற்கான விறுப்படிவம் கீழே தரப் பெறுகின்றது. அதனை வேறு வெள்ளைத் தாளில் படியெடுத்து, நிறைவு செய்து விரைந்து விடுத்தல் வேண்டும்.

தென்மொழி இயக்க அமைப்பு பற்றிய விறுப் படிவம்

1. பெயர், முகவரி,
(தெளிவாக)

2. அகவை/மணமானவர்/மணவாதவர் :
3. தென்மொழி இயக்கக் கொள்கைகளைப் படித்தீர்களா? அவற்றை ஒப்புகிறீர்களா?
4. தென்மொழி இயக்க மூன்று கொள்கைகளில், எக் கொள்கைக்காக நீங்கள் ஈடுபட்டு உழைக்க அல்லது தொண்டாற்ற விரும்புகிறீர்கள்?
(மூன்று கொள்கைகளுக்கும் என்றால் 'மூன்று கொள்கைகளுக்கும்' என்று குறிப்பிடவும்.)
5. நீங்கள் விறு 4-இல் குறிப்பிட்ட கொள்கை அல்லது கொள்கைகளுக்காக எந்த முறையில் உழைக்க விரும்புகிறீர்கள்?
(1) அமைதியாக (2) போராட்ட முறையில், (3) வன்முறையில்
6. தங்களுக்குப் பேச்சு வன்மை/எழுத்துவன்மை/செயல் வன்மை—எதில் ஈடுபாடு உண்டு.
7. இதுவரை தாங்கள் செய்த இலக்கியப்பணி/பொதுப்பணி/கட்சிப் பணி/எந்தஅளவில்? (விளக்கமாகக் குறிப்பிடவும்)
8. தாங்கள் பொதுத் தொண்டு காரணியமாகச் சிறை சென்றதுண்டா? (விளக்கம் தருக) சிறை செல்ல அணியமா?
9. தாங்கள் தென்மொழி இயக்கத்தில் பொறுப்பான பதவிகள் வேண்டுவீர்களா? தந்தால் ஏற்பீர்களா?
10. தங்களை யறிந்த இருவர் முகவரிகள்: 1)
2)

நாள் : கையொப்பம்.

www.thamizham.net - Free E book No 7503

செய்திகள்

1. தமிழ் வளர்ச்சி மன்றம், ஆர்க்காடு (வ. ஆ.)
திருக்குறள் தொடர் சொற்பொழிவு—தொடக்க விழா :

கடந்த 24-8-80 ஞாயிறு மாலை, மணியளவில், ஆர்க்காடு (வ ஆ.) தலைமைத் தமிழ் வளர்ச்சி மன்றத்தின், மாதமொரு மேடைத் தொடர் நிகழ்ச்சியின் சார்பாக, மாதமிருமுறை திருக்குறள் வகுப்பு தொடங்கி வைக்கப்பெற்றது. நிகழ்ச்சிக்குச் சட்டமன்ற உறுப்பினர் ஏ. எம். **சேதுராமன்** தலைமை தாங்கினார். திரு. **இரா. ஈசுவரப்பன்** வரவேற்புரை நிகழ்த்தினார். புலவர் திரு. **சிவசங்கரனார்**, திரு. **இரா. சம்பத்து** ஆகியோர் உரை நிகழ்த்தினர். திருக்குறள் வகுப்பாசிரியர், **பேரா. க. அப்துல் சத்தார்** சிறப்புரைக்குப் பின், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** தொடக்கப் பேருரை நிகழ்த்தித் திருக்குறள் வகுப்பைத் தொடங்கி வைத்தார். மன்றப் பொருளர் **மா. சோதி** நன்றியுரைக்குப் பின் நிகழ்ச்சி இனிதே நிறைவுற்றது. மன்றத் தலைவர் **பொ. கோபால்** அவர்களும், செயலர் **ஆ. கே. கமலக்கண்ணன்** அவர்களும் நிகழ்ச்சியை இனிதே சிறப்புற அமைத்திருந்தது குறிப்பிடத்தக்கது.

2. திருநாவுக்கரசு இளமதி வாழ்க!

சென்ற மடங்கல் 27—(12-9-80)-ஆம் பக்கல் வெள்ளிக் கிழமை காலை 9-30 மணியளவில், சென்னை, தியாகராய நகர், அன்னை வேளாங்கன்னி மேல்நிலைப் பள்ளித் தமிழ்த்துறை ஆசிரியர் **அ. திருநாவுக்கரசு**, க. மு; கல். மு., அவர்களுக்கும், செல்வி. **இளமதி** அறி. மு.வுக்கும், செயங்கொண்டம் வட்டம், தெற்குப் பட்டியில், பாவலரேறு **பெருஞ்சித்திரனார்** அவர்கள் தலைமையில், திருமண விழா இனிதே நடைபெற்றது. திருவாளர்கள் **சா. சிவசுப்பிரமணியம்** க. மு; க இ., **கோ. தியாகராசன்**, **செயச்சந்திரன்** ஆகியோர் திருமண மக்களை வாழ்த்தி நல்லுரையாற்றினர். இறுதியில் மணமகன் நன்றி கூறினார். இத் திருமணச் சிறப்பாகத் தென்மொழி வளர்ச்சிக்கு உருபா இருபத்தைந்து நன்கொடையாகத் தரப் பெற்றது. மணமக்கள் எல்லா நலங்களும் வளங்களும் பெற்று, எந்தமிழ்க்கும் இனத்திற்கும் நாட்டிற்கும் ஏற்ற தொண்டாற்றி இனிதே வாழ நிறைந்த நெஞ்சுடன் வாழ்த்துகின்றோம்.

3. மா. கதிர்ச்சிவன் — து. இலக்குமி வாழ்க!
மா. கலியுகவரதராசு — நா. மாலா வாழ்க!

கழிந்த மடங்கல் 29 (14-9-80)-ஆம் நாள், ஞாயிறு காலை, 6 30 மணியளவில், புதுச்சேரி, கதிர்காமம், திருமுருகன் கோயிலில், செல்வன் **மா. கதிரேசன்** என்றழைக்கும், **கதிர்ச்சிவனுக்கும்**, செல்வி **து. இலக்குமிக்கும்**, கதிர்ச்சிவன் தம்பி, செல்வன்

www.thamizham.net - Free E book No 7503

மா. கலியுகவரதராசுக்கும் செல்வி நா. மாலாவிற்கும் பாவலரேறு பெருஞ்சித்திரனார் அவர்களால் இனிதே தமிழ்த் திருமணங்கள் செய்து வைக்கப் பெற்றன. மண விழா நிகழ்ச்சிகள் பண்ணுராய்ச் சிப் பாவாணர், குடந்தை திரு. ப. சுந்தரேசனார் அவர்கள் தலைமை யிலும், புதுவைக் கல்வி யமைச்சர் திருவாட்டி இரேணுகா அப்பாத்துரை அவர்கள் முன்னிலையிலும் நடைபெற்றன. தலைவரும், முன்னிலையாளரும் உட்பட, புதுவை, கூட்டுறவுத்துறை அமைச்சர் கதிர்வேலு அவர்கள், திருவாளர்கள் க. கருணாநிதி. புலவர். அர. இரத்தினவேலு, மு. வேந்தன், முத்தையனார், புதுவைத் தனித் தமிழ்க் கழகச் செயலர் க தமிழ்மல்லன் க. இ, சூசை. ராசு, அரியபுத்திரி, திருவாட்டி பவானி ஆகியோர் ஈரிணை மணமக்களை யும் வாழ்த்தி நல்லுரை யாற்றினர். தொடக்கத்தில் அனைவரையும் வரவேற்றுத் தமிழூர் வழக்குரைஞர் ப. அருளி வணி. இ; ச. இ. அவர்கள் வரவேற்புரையும் இறுதியில் புலவர். நா. தாயகன் நன்றி யுரையும் நிகழ்த்தினர்.

4. **சென்னைத் தொலைக் காட்சி நிகழ்ச்சியில் பாவலரேறு :**

பெரியாரின் 102-ஆவது பிறந்த நாளை முன்னிட்டு, சென்னைத் தொலைக்காட்சி நிலையத்தினர், கடந்த 18-9-80-ஆம் நாள் இரவு 8-15 மணிக்கு ஏற்பாடு செய்திருந்த வண்ணக் களஞ்சியம் நிகழ்ச்சி யில், பாவலரேறு பெருஞ்சித்திரனார் கலந்து கொண்டு, 'பெரி யாரும் தமிழும்' என்னுந் தலைப்பில் சிறப்புரையாற்றினர். ஆசிரிய ரவர்கள் தொடக்கத்தில் பெரியார் அவர்களின் அரசியல், குமுகாய நாட்டுத் தொண்டுகளை விளக்கி, அவர்கள் திருக்குறள் மாநாடுகள் பல நடத்தித் திருக்குறளைப் பொதுமக்களுக்கு அறிமுகம் செய்து வைத்ததையும், தமிழர்களிடையில் பேரளவில் தமிழர் திருநாளாகிய பொங்கலைக் கொண்டாடச் செய்ததையும் குறிப்பிட்டுப், பெரியார் அவர்களின் தமிழ்ப் பற்றையும், தமிழர்கள் தமிழின் மேல் பற்றுக் கொண்டால்தான் தமிழினம் முன்னேறும் என்று அவர் கூறியதை யும் பல சான்றுகளுடன் எடுத்து விளக்கி, பாவலரேறு அவ் வுரையை ஓர் இன எழுச்சியுரையாக ஆற்றியது குறிப்பிடத் தக்கது.

" தமிழ்ச்சிட்டு "

சென்னை-5

		உள்நாடு	கொழும்பு	பிறவெளிநாடுகள்
ஆண்டுக்கட்டணம்	உருபா	6-00	13-00	13-00
தனியிதழ்	,,	0-50	1-25	1-25

(அரையாண்டுக் கட்டணம் இல்லை)

ஒரிதழுக்கு ஓர் உருபா மேனி முன்பணம் கட்டக்கூடிய விற்பனையாளர் எழுதிக்கேட்க!

www.thamizham.net - Free E book No 7503

ஒன்று கலைஞருக்கு விடுக்க முடிவு செய்துள்ளோம். நமதினத்தின் மொழியின் வாழ்விற்கும் வளர்ச்சிக்கும் ஓய்வு ஒழிவின்றிக் கால மெல்லாம் பணியாற்றும் தங்கள் தொண்டினைப் போற்றுகிறேன். வணங்குகிறேன். தங்கள் வழியே இதழ் நடத்த நானும் முயற்சி மேற்கொள்வேன்.

— சுப. சுப்பிரமணியன்,
ஆசிரியர் 'அந்தமான் முரசு' அந்தமான்.

0:800: தமிழ்நாட்டு வரலாற்றை எழுதுமாறு பாவலர் திரு. கண்ணதாசரைத் தமிழக முதல்வர் கோரியுள்ளமை யறிந்தோம். திரு. கண்ணதாசர் பெரும் பாவலரேயாயினும் பல்லாண்டுக் காலமாக மறைப்புண்டும் மறைப்புண்டும் கிடக்கும் தமிழ்நாட்டு வரலாற்றை எழுதச் சிறிதும் திறமையும் பொறுமையுமற்றவராவார். 'இதனை இதனால் இவன் முடிக்கும் என்றாய்ந்து அதனை அவன்கண் விடல்' என்னும் குறள் நெறிக்கேற்ப அப் பணியைப் பன்மொழிப் புலவர் க. அப்பாத்துரையார், பேரா. தி. வி. சொக்கப்பனார், பேரா. தங்கவேலனார் போன்ற வரலாற்றுப் பேரறிஞரிடம் ஒப்படைக்குமாறு தமிழக முதல்வரை வேண்டிக் கொள்கின்றோம். அப் பணியின் அருமை குறித்து அதிலிருந்து விலகிக் கொள்ளுமாறு பாவலர் திரு. கண்ணதாசரை அன்புடன் கேட்டுக்கொள்கிறோம்.

— கு. பூங்காவனம், அமைப்பாளர், உ. த. கழகம்,
கருநாடக மாநிலம்.

0:801: பேரன்புக்கும் பெருமதிப்புக்கும் உரிய பெருஞ்சித்திரனார் அவர்களுக்கு, வணக்கம் சுவடி 16—ஓலை 12-ஐ வாங்கினேன். படித்தேன். **'அரசியலை விட்டு விலகித் தமிழக விடுதலைக்குப் பாடுபடுங்கள்'** என்னும் ஆசிரியவுரை படித்தேன். தமிழின விடிவுக்குத் தாங்கள் தலைமையேற்க முடியாதா? அந்தத் தகுதி தங்கட்கு இல்லையா? கலைஞர்க்கே மட்டும் உரியதா? தாங்கள் தலைமை தாங்க வந்தால் —தங்கள் தோளுக்குத் தோளாக—கைக்குக் கையாக - தொண்டுக்குத் துணையாக, அடிநிலைத் தொண்டர்களாக விடுதலை முழக்கமிட எழுச்சிமிகு உடன்பிறப்புகள் வரமாட்டார்களோ? **'தமிழர் முன்னேற்றக் கழகம்'** என்ற கட்சியினைத் தாங்கள் தொடங்குங்கள்! தமிழ்நாடு தமிழர்க்கே என்று குரல் எழுப்ப வரும் தோழர்கள் எத்தனைப் பேர் என்பதைக் கணக்குப் பார்ப்போம்! கறைகள் நிறையப் பெற்ற கலைஞரால் தமிழினம் விடுதலை பெறும் என்று நம்புகின்றீர்களா? இறை நம்பிக்கையுடைய தாங்கள் இதனை எழுதுவதற்காக வருத்தப்படுகின்றேன். தங்கள் உண்மையுள்ள தமிழ்த் தொண்டன்,

— த. முல்லைவழுதி, தூத்துக்குடி.

0:802: அய்யா, வணக்கம். இம் மாதத் தென்மொழி இதழில் தினத்தந்தி, முரசொலி, விடுதலை இதழ்கள் பற்றிக் குறிப்பிட்டிருக்கிறீர்கள். அவையும் தமிழர்க்குத் தொண்டு செய்கின்றன ஓரளவுக்கு. தமிழில் ஓரளவு புலமை பெற்றவர்களுக்கு மட்டுமே — தமிழ்ப் புலமை பெற்ற பார்ப்பனர் அல்லாதவர்கட்கு மட்டுமே — தென்மொழி பயன்படுகிறது. எழுத்துக் கூட்டிப் படிக்கின்ற —சரளமாகப் படிக்கும் ஆற்றல் குறைந்த தமிழர்களுக்குத் தினந்தந்தி, மாலை முரசு, தினகரன் போன்ற இதழ்கள் தொண்டு ஆற்றிவருகின்றன. அவற்றின் நடை உயர்வதற்கு கருத்துக் கூறுங்கள். திட்டாதீர்கள். விடுதலை மிகக் குறைந்த விற்பனை உள்ள நாளிதழ் தான். ஆயினும் அந்த இதழும், அந்த இதழ் மூலம் உருவான பெரியாரின் நூல்களும் ஆற்றியுள்ள தொண்டு மிகப் பெரும் அளவினதாகும். 'விடுதலை' விதைத்த பார்ப்பனிய - பார்ப்பனிய வெறுப்பு

www.thamizham.net - Free E book No 7503

வளர்ச்சி காரணமாகத்தான் 'தென்மொழி' இதழுக்கும் கூட நூலகங்களில் இடம் கிடைத்துள்ளது. தனித்தமிழ் வளர்ச்சிக்குத் தொடர்ந்து தொண்டாற்றுங்கள். பிறரைத் திட்டாமலே தொண்டாற்ற இயலும். வணக்கம். —**சு. ஆறுமுகம்,** இராணிப்பேட்டை.

0:803: அன்புநிறை தமிழ்த் தலைவ! அன்பு வணக்கங்கள். சாதி ஒழிப்பு—ஒன்றே தமிழர்களை ஒன்றாக இணைக்கும் என்ற கருத்து தாங்கிய சென்ற தென்மொழி பெற்றோம். இன்றைய இளைஞர்களை எண்ணும்போது இப்போது சாதிவெறி தழைத்து ஓங்குகிறதே தவிர வீழ்ச்சியடையவில்லை. கரணியம் அரசியல் அரைவேக்காட்டுப் 'பிழைப்பு' வேலைதான். இவர்கள்தாம் சாதிகள் வேரூன்ற நீர்பாய்ச்சித் தமிழுமெங்கும் சாதிக் களைகளை முளைக்க விடுகின்றனர். மீண்டும் இப்போது சாதிகள் பாகுபாடு வளர்க்க—தேசிய நீரோட்டம் கருத்துகள் பரப்ப அப்பட்டமாக எல்லாக் கழகங்களும் முன்னின்று தோளோடு தோள் கொடுத்துப் படுகுழி தோண்டுகின்றன. எத்தனை விழாக்கள்! எத்தனைக் கொண்டாட்டங்கள்! இவை எல்லாவற்றிலும் இழிவு என்னவென்றால் தமிழர் என்று சொல்லிக் கொள்ளும் தலைவர்கள் சிலர் சாதி மாநாடுகளில் கலந்து கொள்கின்ற வெட்கக்கேடு! தங்கள் சாதிக்கும் வேலைக்கு ஒதுக்கீடு கேட்கின்ற உயர்ந்த மனப்பாங்கு! ஆகா...என்னே தமிழர்கள் ஒற்றுமை! தங்கள் தென்மொழியில் அறிவியல் தொடர்பான எளிய கட்டுரைகள் ஒன்றாவது சேர்க்கப்பட வேண்டும் என அன்புடன் கேட்டுக்கொள்கின்றேன். 'ஆதி-இஃது ஆதித் தமிழ்ச் சொல்லே'—மொழிஆய்வுக் கட்டுரை மிகவும் தெளிவாக விளக்கப்பட்டிருந்தது. தொடர்ந்து இது போன்ற ஆய்வுக் கட்டுரை வெளியிட்டுத் தமிழுக்குப் புது ஆக்கங்களைப் படைக்குமாறு வேண்டுகின்றேன்.

—**சி. வெற்றிவேந்தன்,** கரைமேடு, பாகூர்.

0:804: ஐயா, வணக்கம். தமிழர்க்குத் தனிநலம் வாய்த்தற்கும் பொதுமையுணர்வு அமைதற்கும் பெரிதும் முட்டுக்கட்டையாய் இருப்பன சாதிகளே ஆகும். அவற்றைத் தெள்ளிதின் விளக்கித் தமிழர்களைப் பார்ப்பனர் வகுத்த சாதிமுறைத் தளைகளை அறுத்தெறிந்து விட்டு வர வேண்டுகோள் விடும் வகையில் அமைந்த ஆசிரியவுரை நன்று; தேவையானதுங்கூட. அருளியின் 'ஆதி'—சொல்வரைவு பயன் மிக்கது. —**பாவண்ணன்,** புதுச்சேரி-10.

0:805: அன்புப் பாவலரேறுவுக்கு வணக்கம். தென்மொழி சுவடி 17 ஓலை 1-இல் வந்த ஆசிரியவுரையைப் படித்தேன். பார்ப்பனியம் நம் நாட்டில் இப்படியே இருக்குமானால் நம் இனம் அவர்களுக்கு அடிமைப்பட்டு செம்மறி ஆடுகளாய் இருந்து விடும். நம் மக்களுக்கு கல்வி அறிவு இல்லாமல் இருப்பதனால் அவர்களுக்குக் கொள்ளையடிக்க வாய்ப்பாகப் போய்விட்டது

—**தமிழ்ச் சிறுவன் சு. ஆறுமுகம்,** புத்தன்அரச்சல்.

தென்மொழி மின் அச்சகம், சென்னை 600005 (தமிழகம்)

www.thamizham.net - Free E book No 7503